# ஈழநாடு

Eelanadu




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 29.03.2021 திங்கட்கிழமை | இதழ் : 119 | பக்கங்கள் : 16

## கண்காணிப்பு வலயத்துக்குள் வந்தது பால்பண்ணை கிராமம்!

### பிற பிரதேசங்களுடன் தொடர்பு துண்டிப்பு



*யாழ்ப்பாணம், மார்ச் 29*


திருநெல்வேலி - பால்பண்ணை கிராமம் தொற்று கண்காணிப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், அந்தப் பகுதிக்கு வெளியார் செல்வதும் அங்கிருந்து மக்கள் வெளியேறுவதும் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும் அத்தியாவசிய தேவை, தொழில் நிமித்தம் செல்பவர்கள் தமது அலுவலக அடையாள அட்டையை காட்டி செல்ல முடியும் என்று யாழ். மாவட்ட செயலர் க. மகேசன்

15



**08**

உலகம் சுற்றுகிறது தீர்மானம்! தலையை சுற்றுகிறது அறிக்கை



**09**

ஒரிரு தினங்களில் விடுதலையான இந்திய மீனவர்கள்



**12**

ஒரேநாளில் 114 பேர் சுட்டுக்கொலை! மியன்மாரில் இராணுவம் வன்செயல்!!




**13**

கொன்வே அதிரடி ஆட்டம்! நியூஸிலாந்து பெரு வெற்றி!!

## வாக்களிப்பை இந்தியா தவிர்த்தமை இலங்கைக்கு ஆதரவான நகர்வல்ல!

### ஜெனிவா குறித்து பா.ஜ.க. கருத்து



சென்னை, மார்ச் 29

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த வாக் கெடுப்பில் இருந்து இந்தியா வெளியேறியதால் பிரேரணை தோற்று விடவில்லை எனவும் அதனை இலங்கைக்கு ஆதரவான நகர்வு என எடுத்துக்கொள்ள முடியாது எனவும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழக பேச்சாளர் நாராயணன் திருப்பதி தெரிவித்துள்ளார்.

15

## ஏப்ரலிலும் விசேட விவாதம்!

### 5 நாட்கள் கூடுகிறது பாராளுமன்றம்

*கொழும்பு, மார்ச் 29*

ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்

15

## யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு ஒரு வாரத்துக்கு சிறப்பு விடுமுறை

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்து பாடசாலைகளும் ஒரு வாரத்துக்கு மூடப்படுவதாக யாழ். மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

15

## வடக்கில் நேற்று மட்டும் பன்னிரு தொற்றாளர்கள்!

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 12 பேருக்கு

15

## கொரோனா தொற்றால் 35 வயது நபர் மரணம்!

*கொழும்பு, மார்ச்.29*

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி

15

## நாடு கடத்துவதற்கு எதிராக ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்




*பெர்லின், மார்ச் 29*

தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்களை இலங்கைக்கு நாடுகடத்துவதற்கு ஜேர்மன் அரசாங்கம் திட்டமிட்டுள்ளமைக்கும்

15

## மூன்று பிள்ளைகளையும் தானே பொறுப்பேற்றார் பதுளை ஆயர்



*கொழும்பு, மார்ச் 29*

பசறை 13 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற கோர பஸ் விபத்தில் பெற்

15

## புலம்பெயர் அமைப்புகள், நபர்கள் மீது அதிரடி தடை விதித்தது இலங்கை அரசு

### ஏற்கனவே உள்ள பட்டியலில் புதிய பெயர்கள் இணைப்பு

*கொழும்பு, மார்ச் 29*

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் பலவற்றுக்கும் புலம்பெயர்ந்து வாழும் குறிப்பிட்ட அமைப்புக்களுடன் சம்பந்தப்பட்ட சிலருக்கும் இலங்கை அரசு தடை விதித்துள்ளது.

இது குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

பயங்கரவாத சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் என ஏற்கனவே தடை விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளவர்

15

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று பிள்ளை...

றோரை இழந்த மூன்று பிள்ளைகளையும், அவர்களின் குடும்பத்தாரின் விருப்பத்தின்பேரில் பதுளை கத்தோலிக்க மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய வின்சன் பெர்ணாண்டோ ஆண்டகை பொறுப்பேற்றுள்ளார்.

ஈயூனியா (வயது-09), ஆரோன் (வயது-08) , இவாஞ்சலினா (வயது-04) ஆகிய மூன்று பிள்ளைகளுமே ஆயரினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே வைத்தியர் ஒருவர் இம் மூன்று பிள்ளைகளையும் தத்தெடுத்து வளர்க்கவுள்ளதாக செய்திகள் வெளியாகிய நிலையில் நேற்று முன் தினம் பதுளை மாவட்ட கத்தோலிக்க மறை மாவட்ட ஆயரினால் பிள்ளைகள் பொறுப்பேற்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது தாத்தா (செபஸ்டியன் பெனடிக் (வயது-70 ), பாட்டி ஐயாசாமி செல்வநாயகி (வயது-63) ஆகியோரின் அரவணைப்பில் அமர்த்தப்பட்டு கண்காணிக்கப்படவுள்ளனர்.

இக்குடும்பத்துக்கான அத்தியாவசிய தேவைகள் பதுளை மறைமாவட்ட ஆயரின் ஆதரவில் லுணுகல புனித லூர்து அன்னை ஆலயப் பங்குதந்தையூடாக முன்னெடுக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. இதன்படி இந்தப் பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் முழுக் கவனமும் ஆயரினால் கண்காணிக்கப்படவுள்ளது.

இப்பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கும் குடும்ப வாழ்வாதார தேவைகளுக்கும் உதவுவதற்கு முன்வருவோர் ஆயரினால் மேற்கொள்ளப்படவிருக்கும் அறக்கட்டளை நிதியத்தினூடாக உதவ முடியும்.

கடந்த சனிக்கிழமை பசறையில் நிகழ்ந்த விபத்தில் அந்தனி நோவா - பெனடிக்ற் மடோனா தம்பதியினர் உள்ளடங்லாக 14 பேர் பரிதாபமாக பலியாகிய சோகசம்பவம் முழு நாட்டையும் சோகத்தில் ஆழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரலிலும்...

பட்டது.

இதற்கு அமைய ஏப்ரல் 5ஆம் திகதி திங்கட்கிழமை விசேட தினமாக பாராளுமன்றம் கூடவுள்ளது. அன்று முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணி வரை முழுநாளும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரத்தை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

அன்றையதினம் தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான பிரேரணையொன்றை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அத்துடன், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை ஐந்தாவது நாளாக ஏப்ரல் 7ஆம் திகதி நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, அரசியல் பழிவாங்கள் தொடர்பாக விசாரித்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஏப்ரல் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 6ஆம் திகதி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான கட்டளைகள், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான தீர்மானம் உள்ளிட்ட 8 விடயங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அன்றையதினம் முற்பகல் 10 மணி முதல் மாலை 4.30 மணிவரை இவை குறித்த விவாதம் நடைபெறவிருப்பதுடன், மாலை 4.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும்.

## வாக்களிப்பை...

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் மீதான வாக்கெடுப்பிலிருந்து இந்தியா விலகியமைக்கான காரணங்கள் தொடர்பில் நாராயணன் திருப்பதி ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

வாக்கெடுப்பில் இருந்து இந்தியா வெளியேறியதால் தீர்மானம் தோற்றுவிடவில்லை எனவும் அதனை இலங்கைக்கு ஆதரவான நகர்வு என எடுத்துக் கொள்ள முடியாது எனவும் நாராயணன் திருப்பதி குறிப்பிட்டார்.

2009 ஆம் ஆண்டில் இன அழிப்புக்கு எதிராக கட்சியின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு கடுமையாகக் குரல் கொடுத்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த முறை நம்மோடு சேர்ந்து 14 நாடுகளும் தங்களின் வாக்குகளை அளிக்காமல் வெளியேறியுள்ளன. அதனால், இது இலங்கை இந்தியாவை சார்ந்துதான் இருக்கவேண்டும் என்ற கட்டாயத்தை இனிவரும் காலத்தில் உருவாக்கப்போகின்றது.

பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ் உட்பட பல நாடுகளின் உதவிகளை இலங்கை கோரியது. தீர்மானம் வெற்றி பெற்றதற்குக் காரணம் நம்மோடு சேர்ந்து வெளிநடப்புச் செய்த நாடுகளையும் சேர்த்துப் பார்த்தோம் என்றால், இந்தியாவின் இராஜதந்திரம் என்னவென்று எல்லோருக்கும் புரியும்.

அன்றைக்கு நாம் ஆட்சியில் இல்லை. அன்றைக்கு பாராளுமன்றத்தில் பாரதிய ஜனதாக் கட்சி மிகப்பெரிய குரல் கொடுத்தது. இது மனித இன அழிப்பிற்கு சற்றும் குறைவில்லாதது என்று நாம் கூறியிருக்கின்றோம் எனவும் நாராயணன் திருப்பதி குறிப்பிட்டார். (அ)

## கொரோனா...

மேலும் இருவர் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 561 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு 15 பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயது ஆணொருவரும் மற்றும் மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயது ஆணொருவரும் இவ்வாறு உயிரிழந்தனர் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் நேற்று 237 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதற்கமைய நாட்டில் இதுவரை 92 ஆயிரத்து 88 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-எ)

## யாழ். வலயப்...

யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்று நிலமை அதிகரித்து வரும் நிலையில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் இன்றிலிருந்து ஒரு வாரத்துக்கு மூடப்படும்.

வடக்கு மாகாண ஆளுநர், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடியதன் அடிப்படையில் இன்றில் இருந்து எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாணம் கல்வி வலயம் தவிர்ந்த ஏனைய கல்வி வலயங்களில் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் வழமை போல இடம்பெறும்- என்றார்.

# “இந்த அரசாங்கத்தை பயன்படுத்தி நாம் சாதனைகளை படைக்கலாம்”

ஏறாவூர்,மார்ச்.29

பல சிக்கலான கட்டத்தில் இந்த நாட்டைத் தளம்பல் இல்லாமல் வழிநடத்துகின்ற ஜனாதிபதி, அதற்கு அத்திபாரமாக இருக்கின்ற பிரதமர் என சிறந்த ஒரு நிர்வாகக் கட்டமைப்புக்குள் நாம் நிறைய சாதனைகளைப் படைக்கலாம். இந்த அரசாங்கத்தை நாம் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் எமது மக்களுக்கான வளங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடியில் நேற்று இடம்பெற்ற அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்துக்குரிய பிரதேச அமைப்பாளர்கள், இணைப்பாளர்கள், இளைஞர் அணித் தலைவர்கள், மகளிர் அணித் தலைவிகள் ஆகியோருக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்விலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும், கடந்த பொதுத் தேர்தலில் எங்களுக்கு வாக்களித்த மக்குளக்கு நன்றி கூறுகிறோம். ஏனெனில் எங்களுடைய தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி வரலாற்றிலே முதன்முதலாக மக்களின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதென்பது அந்த நிகழ்வின் பிற்பாடுதான். எங்களுக்கு இத்தனை வாக்குகள் கிடைக்குமா? என்று இந்த உலகமே பார்த்துக் கொண்டிருந்தது. அதேபோல் எமக்கு மக்கள் வாக்குகளை அள்ளி வழங்கி எங்களுக்கான நிலையான அத்திபாரத்தை இட்டிருக்கின்றார்கள். எனவே எம் ஒவ்வாருவருக்கும் அந்தக் கடமைகள் சுமத்தப்பட்டிருக்கின்றன.

அந்த மக்கள் ஏன் எங்களுக்க வாக்களித்தார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த மக்களுக்கு எங்கள் மீது நம்பிக்கை இருக்கின்றது. அந்த நம்பிக்கையைக் காப்பவர்களாக, அதனை மேலும் கட்டியெழுப்புபவர்களாக நாங்கள் இருக்க வேண்டும். நமக்குள் வேறுபாடுகள், பிரிவினைகள் இல்லாமல் ஒற்றுமையாக இருந்து செயல்பட வேண்டும். - என்றார். (எ)

## கண்காணிப்பு...

தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தக் கிராமத்துக்கு அருகே உள்ள திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம் என்பனவும் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் தலைமையில், மாவட்ட கொரோனா கட்டுப்பாட்டு செயலணியின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் அரச அதிபர் மேலும் கூறுகையில்,

சிறப்புக் காரணங்களுக்காக கிராமத்திலிருந்து வெளியில் செல்வோர் பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் விண்ணப்பித்து அனுமதி கிடைத்தால் பயணிக்க முடியும் - என்றார்.

இதனிடையே, யாழ். மாவட்டத்தில் மார்ச் மாதத்தில் மட்டும் 300இற்கும் மேற்பட்டோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். அடுத்து வரும் நாட்களில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து பின்னர் குறைவடையும் என்று சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர். (அ-ஐ - 3)

## நாடு கடத்து...

புகலிடக்கோரிக்கையாளர்களை தடுத்து வைத்துள்ளமைக்கும் எதிர்ப்பு தெரிவித்து ஜேர்மனியில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பகுதிகளிற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புலம்பெயர்...

களுக்கு மேலதிகமாகவே புதிய பெயர்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ணவினால் இது குறித்த வர்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2014 இல் முதல் தடவையாக 16 புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களையும், 424 தனிநபர்களையும் இலங்கை அரசு தடை செய்திருந்தது. 2016 இல் மைத்திரிபால - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் 8 அமைப்புக்களினதும், 269 தனிநபர்களினதும் தடை நீக்கப்பட்டது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் மேலும் பலருடைய பெயர்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளதுடன், தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த அமைப்புக்கள், தனிநபர்களும் தடைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, பிரித்தானிய தமிழர் பேரவை, கனேடிய தமிழ் காங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், உலக தமிழர் பேரவை, கனேடிய தமிழர் தேசிய அவை, தமிழ் இளையோர் அமைப்பு, உலக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகிய அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அமைப்புகள் சார்ந்த தனி நபர்களின் பெயர்களும் இந்த தடைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

## வடக்கில்...

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்களில் 6 பேர் யாழ். போதனா வைத்தியசாலையை சேர்ந்தவர்கள் என்று தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று, 370 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் போதனா வைத்தியசாலையை சேர்ந்த 6 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். அத்துடன், சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை மருத்துவ அதிகாரிகள் ஒவ்வொருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று வவுனியா மாவட்டத்தை சேர்ந்த மூவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். இவர்களில் இருவர் வவுனியா பொது வைத்தியசாலையை சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் வவுனியா தெற்கு மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்தவர் எனவும் அறிய வருகின்றது. (ஐ-3)

## அடைக்கலம்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவத்தோடு, பாதுகாப்பான முறையில் நடத்துவதே சரியான மனிதாபிமான அணுகுமுறையாக அமையமுடியும்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களால் இலங்கைக்குகூட அந்திய செலாவணி அதிகளவில் கிடைத்துவருகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்கள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பிவைக்கின்ற பெருந்தொகை பணம் காரணமாகவே வடக்கு-கிழக்கு பிரதேசங்கள் யுத்த நிலவரங்களின்போது பொருள் பண்டங்களின் விலைகள் அதிகரிக்கின்ற போதிலும் அப் பிரதேசமக்களினால் தமது வாழ்க்கையை கொண்டுசெல்லக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில், இலங்கைக்கு திருப்பியனுப்பப்படவுள்ள அடைக்கலம் நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை இலங்கையரசு மனிதாபிமான கண்ணோட்டத்தோடு நோக்கவேண்டியது அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது...!

அந்தக் காலங்களில் கொண்டாட்டங்களில் பந்தியில் இருந்து சாப்பிடுவது என்பதே ஒரு தனி சுகமானது.

இப்போதெல்லாம், திருமணமோ, பிறந்தநாள் கொண்டாட்டமோ எதுவானாலும், சாப்பாட்டு நேரம் வரும் போது ஏனடா வந்தோம் என்றிருக்கும்.

சாப்பாட்டு தட்டுடன் கியூவில் நிற்கவேண்டியிருக்கும். சில வேளைகளில் பல நிமிடங்கள் கால்கடுக்க நிற்க வேண்டியிருக்கும். கண்ணை மூடிக்கொண்டு வீட்டு வாசல்களில் அல்லது கோவில் வாசல்களில் யாசகம்செய்பவர்களை நினைத்தால் நாமும் அதுபோல நிற்பதுபோல தெரியும். இதற்காகவே ஏதேனும் சாட்டுச் சொல்லி விட்டு சாப்பாட்டுநேரத்திற்கு முன்னதாக பலர் கிழம்பி விடுவதும் இப்போது நடக்கின்றது.

ஆனால் அந்தக் காலங்களில் இப்படியல்ல. கொண்டாட்டம் முடிந்து சாப்பாட்டு நேரம் தொடங்கியதும் கொண்டாட்டத்தை நடாத்துபவர் கையில் செம்பைத் தந்து கைகளைக்கழுவிக்கொண்டு பந்தியில் வந்து அமருமாறு கேட்பார்.

வாழை இலைகளை முதலில் போட்டு, சோறு, கறிகள் என்று ஒவ்வொன்றாக பரிமாறுவார்கள். நிலத்தில் அமர்ந்திருந்து வாழை இலையில் போடப்பட்ட உணவை உண்பதே தனிச் சுகம்.

அந்தக் காலங்களில் சைவர்களுடைய எந்தக் கொண்டாட்டத்திலும் சைவ உணவுகளே அனேகமாக பரிமாறப்படும். திருமண வீட்டில் இதற்காகவே நான்காம் சடங்கை நடாத்தி அசைவ உணவு பரிமாறுவார்கள். சைவ உணவு என்றால் அந்தக் காலத்தில் உருழைக்கிழங்குக் கறிதான் இறைச்சிக்கறி போல...

சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது ஒருவருக்கு உருழைக்கிழங்கு கறி வேண்டும் போல இருந்தால், சாப்பாடு பரிமாறுபவர்களைக் கூப்பிட்டு, தனக்கு பக்கத்தில் இருப்பவர் கிழங்குக்கறி கேட்கிறார் என்பார்கள். ஏனெனில் பக்கத்திலிருப்பவருக்கு போட்டால் அருகில் இருப்பவர்களுக்கும் கிடைக்கும் என்பதால்.

'சாணக்கியனும் சுமந்திரனும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவை ஓரம்கட்டுகின்றார்கள் ' என்று சிவஞானம் சிறிதரன் சில நாட்களுக்கு முன்னர் கவலைப்பட்டிருந்தார். தேர்தல் பிரச்சாரங்களின் போது, அவர் ஓரம் கட்டாமல் இருந்திருந்தால் மாவை இப்போதும் பாராளுமன்றத்தில் இருந்திருப்பார்.

தேர்தலுக்கு முன்னர் புலிகளின் போராட்டத்தை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று பகிரங்கமாக சிங்கள ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்ததால் சுமந்திரன் சர்ச்சைக்குள்ளானார். அவரது இந்த பேச்சும் கூட்டமைப்பின் தோல்விக்கு காரணம் என்பதை உணர்ந்து கொண்டதால்தான் சுமந்திரன் மாவீரர் தினத்திற்கு மில்லரின் வீட்டுக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார் என்பது வேறு விடயம்.

விடுதலைப் புலிகளின் அனுதாபி போல தன்னைக் காட்டிக்கொள்ளும் சிறிதரன், தேர்தலில் சுமந்திரனுடன் அணிசேர்ந்ததும், அவரை அன்டன் பாலசிங்கத்துடன் ஒப்பிட்டதும் கூட தேர்தல் தோல்விக்கு காரணம் என்பதும் ஒன்றும் ஆராய்ச்சிக்குரியது அல்ல.

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு தேர்தலில் எழுபத்தி இரண்டாயிரம் வாக்குகளைப் பெற்ற சிறிதரன், கடந்த தேர்தலில் அரைவாசிக்கும் குறைவான வாக்ககளையே பெறமுடிந்தது.

சுமந்திரனால் தனக்கு நேர்ந்த கதியை எண்ணி சிறிதரன் கவலைப்படுவது இருக்கட்டும், சிறிதரனால் தனக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்பதால் அவரை சுமந்திரன் கைவிட்டதுதான் இப்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது.

தேர்தல் முடிந்ததும் தமிழரசுக்கட்சியின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்க தான் தயார் என்று சிறிதரன் அறிவித்தது ஒன்றும் திடீரென்று நடந்ததல்ல. தேர்தலுக்கு முந்தையமுடிவு. அந்த முடிவிலும் அவர் நினைத்ததுபோல எதுவும் நடக்கவில்லை.

தேர்தல் முடிந்ததும், கட்சியின் தோல்விக்கு தலைமையே பொறுப்பேற்கவேண்டும் என்று சுமந்திரன் அவசரம் அவசரமாக அறிவித்த கையோடு, தலைமைப் பதவியை ஏற்க நான் தயார் என்று சிறிதரன் அறிவித்தார்.

உண்மைதான், கட்சியின் தோல்விக்கு தலைமை பொறுப்பேற்கத்தான் வேண்டும். ஆனால் கட்சித் தலைமை விட்ட தவறு, தேர்தல் காலத்திலும் அதற்கு முன்னரும் கட்சியில் இருந்தவர்களை கட்டுப்படுத்தத் தவறியதுதான் தலைவர் செய்த தவறு. அந்தத் தவறை தலைவர் செய்யாமல் விட்டிருந்தால், இன்றும் கட்சிக்குள் இருந்துகொண்டு குடைச்சல்கொடுப்பவர்கள் காணாமல் போயிருப்பார்கள்.

உண்மையில் கட்சித் தலைவருக்கு இவர்கள்தான் நன்றி சொல்லவேண்டும்.

மாவைக்காக சிறிதரன் இப்போது ஓலமிடுவது, அந்தக் காலத்தில் பந்தியில் சாப்பிடுகின்றபோது தனக்கு தேவையான கறியை பக்கத்தில் உள்ளவர் கேட்பதாக கூறுவது போன்றதுதான்!

**- ஊர்க்குருவி.**

சூயஸ் கால்வாயில் சிக்கியுள்ள சரக்குக் கப்பலால்

# எரிவாயு விலை அதிகரிக்கக்கூடும்: பிரசாரம் உண்மைக்கு புறம்பானது

## அரசுக்கு பதிலளிக்க எதிர்க்கட்சி தயார்



கொழும்பு,மார்ச் 29

சூயஸ் கால்வாயில் சிக்கியுள்ள சரக்குக் கப்பலால் இலங்கையில் எரிவாயு விலை அதிகரிக்கக்கூடும் என அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பிரசாரம் உண்மைக்குப் புறம்பானது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த கருத்துக்கு தர்க்கரீதியாக பதிலளிக்க எதிர்க்கட்சித் தயாராகவுள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் சிக்கியுள்ளதால் நமது நாட்டில் எரிவாயு விலை அதிகரிக்கக்கூடும் என சில அரசியல்வாதிகள் கூறுகின்றனர். பல வருடங்களாக எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படவில்லை என அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறுகிறார். எரிவாயு விலை அதிகரிக்கப்படாவிட்டால் நாம் திவாலாகிவிடுவோம் என எரிவாயு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. பொருள்களின் விலையை அதிகரிக்க அல்லது குறைக்க அரசியல்வாதிகள் தலையிடுவது மோசமானது. சூயஸ் கால்வாயில் சிக்கியுள்ள கப்பல் காரணமாக எரிவாயு விலையை அதிகரிப்பதாக் கூறி அரச நிர்வாகத்தை கேலிக்குள்ளாக்க வேண்டாம் என அவர் கேட்டுக்கொண்டார். (எ)

# கிராம பொருளாதார வலுப்படுத்தல் வேலைத்திட்டத்துக்கு முன்னுரிமை



கொழும்பு, மார்ச் 29

இந்த வருடத்தில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் கிராமிய மக்களின் பொருளாதார வலுப்படுத்துதல் என்ற வேலைத் திட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் நிமால் லான்ஸ தெரிவித்தார்.

கொழும்பு கட்டான ஆடிஅம்பலம கிம்புலாபிட்டிய வீதி மற்றும் மூர்தான பம்புகுளிய வீதி காப்பெற்றிட்டு அபிவிருத்தி செய்யும் ஆரம்ப நிகழ்வின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆடிஅம்பலம, கிம்புலாபிட்டிய வீதியை பயன்படுத்துவதன் மூலம் கொச்சிக்கடை பிரதேசத்தில் நிலவும் வாகன நெரிசலைத் தடுக்க முடியும். நீண்ட காலமாக பழுதடைந்த நிலையிலுள்ள இந்த வீதியைப் புனரமைப்பதற்கு 150 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (எ)



# ஆயுதக் களஞ்சியம் தீக்கிரை!

தலவாக்கலை, மார்ச் 29

தலவாக்கலை புகையிரத நிலையத்தில் அமைந்துள்ள ஆயுதக் களஞ்சியசாலையில் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் அந்தக்களஞ்சியசாலை முற்றாக எரிந்து நாசமாகியது.

குறித்த தீ விபத்தால் எவருக்கும் உயிர் ஆபத்தோ, காயங்களோ ஏற்படாத போதிலும் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பொருள்களைத் தவிர அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தத் தீப்பரவல் ஊழியர்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தலவாக்கலை பிரதேசத்தில் கடும் மழை பெய்து வருவதன் காரணமாக தீ கட்டுப்படுத்துவது இலகுவாக அமைந்துள்ளது.

குறித்த தீ விபத்து மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

தீ விபத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பில் இதுவரை தெரிய வராத நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# காரில் சடலம் கண்டுபிடிப்பு!

சிலாபம், மார்ச் 29

விற்பனை நிலையமொன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரிலிருந்து சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாபம் - புத்தளம் வீதியில் அமைந்துள்ள விற்பனை நிலையத்துக்கு அருகில் வாகன தரிப்பிடத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

வாகனச் சாரதி இருக்கையிலிருந்து சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. 66 வயது கண்டியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கொரோனா தொற்றிலிருந்து மேலும் 235 பேர் பூரணசுகம்

கொழும்பு, மார்ச் 29

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான வர்களுள் நேற்று மேலும் 235 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பினர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 88 ஆயிரத்து 623 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 559 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், நாட்டில் இதுவரை 91 ஆயிரத்து 839 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் 2,615 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

கல்வி tv CHANNEL-1

காலை
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

பகல்
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

இரவு
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
29.03.2021 திங்கட்கிழமை
சார்வரி, பங்குனி 16

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அரசாங்கத்தின் பதிலடி

ஜெனிவா பிரேரணையில் என்ன இருக்கின்றது - என்ன இல்லையென்பது தொடர்பில் தமிழர் தரப்புக்கள் தங்களின் நேரத்தை விரயம் செய்துகொண்டிருக்கும்போது, அரசாங்கமோ, வழமையான பாணியில் பதிலடி வேலைகளில் இறங்கிவிட்டது. மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசியிருக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புதிய லிபரல் கொள்கைகளை பரப்பும் மற்றும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் பலம்பொருந்திய நாடுகளுக்கியிலான போட்டியில் பங்குகொள்வதற்கான தேவை தனக்கில்லை - கடந்த அரசாங்கம் ஜெனிவா பிரேரணைக்கு இணையனுசரணை வழங்கித் தவறு செய்தது, அதனை நாம் சரிசெய்ய முயற்சிக்கின்றோம். இதன் காரணமாகவே எம்மீது அழுத்தங்கள் போடப்படுகின்றன என்று தெரிவித்திருக்கிறார். நாடு, ஆபத்தான சர்வதேச அழுத்தங்களுக்குள் சிக்கிக்கொண்டிருக்கின்றது, இதற்கு இந்த அரசாங்கமே காரணம் - என, எதிரணியினர் பிரச்சாரங்களை மேற்கொண்டுவரும் சூழலிலிலேயே ஜனாதிபதியின் மேற்படி கருத்து வெளியாகியிருக்கின்றது.

தாம் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை என்றவாறான கருத்தையே அரசாங்கம் மீளவும் சிங்கள மக்கள் மத்தியில் கூறுவருகின்றது. அந்த வகையில், இலங்கை அரசாங்கத்தின் மீதான அழுத்தங்களை அதிகரிக்க வேண்டுமென்னும் பிரச்சாரங்களை மேற்கொண்டுவரும் புலம்பெயர் அமைப்புக்கள் பலவற்றின்மீது, அரசாங்கம் மீளவும் தடைகளை விதித்திருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மீதான பிரேரணைக்கு தலைமைதாங்கிய நாடுகளை தளமாகக்கொண்டியங்கிவரும் பிரித்தானிய தமிழர் பேரவை, கனடிய தமிழர் அவை, உலகத் தமிழர் பேரவை போன்ற அமைப்புக்கள் மீதும் - பல தனிநபர்கள் மீதும், தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் இவ்வாறான அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றும், இலங்கை தமிழர்கள்மீது சட்ட ரீதியாக நடவடிக்கைகளையும் எடுக்கமுடியும்.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரன், பிரித்தானியாவை தளமாகக் கொண்டியங்கிவரும் சிலரின் ஆதரவுடன், தமிழர் தாயகப் பகுதியில் காணி அபகரிப்பு தொடர்பில் இணையவழி மாநாடொன்றை நடத்தியிருந்தார். அதேபோன்று, அண்மைக் காலத்தில் ஜெனிவா பிரேரணை தொடர்பில் புலம்பெயர் அமைப்புக்கள் மேற்கொண்ட பல கலந்துரையாடல்களில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குகொண்டிருந்தனர். விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமர் பொன்னம்பலம் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர். தற்போது விதிக்கப்பட்டிருக்கும் தடையின் அடிப்படையில், எதிர்காலத்தில் குறித்த அமைப்புக்களின் சந்திப்புக்களில் பங்குகொள்பவர்கள்மீது, பொலிசார் தகுந்த ஆதாரத்தின் அடிப்படையில் வழக்குகளை தாக்கல் செய்யமுடியும். அரசாங்கம் எந்தளவு இந்த விடயங்களில் இறுக்கமாக இருக்குமென்பதை பொறுத்திருந்துதான் நோக்கவேண்டும்.

மேற்படி தடைகளை மேற்குலகிற்கு எதிரானதொரு பதிலடியாகக்கூட கருத இடமுண்டு. அதேவேளை, இவ்வாறான கலந்துரையாடல்களில் ஈடுபட்ட, அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கிவரும் அமெரிக்க செயற்பாட்டு குழு, குறித்த தடைப்பட்டியலில் சேர்க்கப்படவில்லை. அது, அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கிவரும் ஓர் அமைப்பு என்பதால் தடையில் சேர்க்கப்படாமல் விடப்பட்டிருக்கலாம். ஆனால், அரசாங்கத்தின் இதுபோன்ற நடவடிக்கைகளால் மேற்குலகத்தை எதிர்கொள்ள முடியுமா? உண்மையில், இவ்வாறான அமைப்புக்களின் மீதான தடையால் குறித்த அமைப்புக்கள் புலம்பெயர் தமிழர் மத்தியில் பிரபலமடையுமேயன்றி, வேறு எதுவும் நடந்துவிடப் போவதில்லை. மேலும், குறித்த நாடுகளில் இவ்வாறான அமைப்புக்களின் செல்வாக்கு என்பதும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிலையில்லை. ஆனால், பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் தங்களது நாடுகளின் சட்டத்தின் அடிப்படையில், இலங்கையின் அதிகாரிகள் பலர்மீது, தடைகளை ஏற்படுத்த முடியும். அவ்வாறு அவர்கள் செயற்படுவார்களாக இருந்தால், அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமும் தடைகளை ஏற்படுத்தும். இலங்கை சர்வதேச அரங்கில் மேலும் பின்னடைவுகளை சந்திக்க நேரிடும்.

# அடைக்கலம் நிராகரிக்கப்பட்ட புலம்பெயர்ந்தோரின் அவலம்!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்று, ஐரோப்பியநாடுகளில் தஞ்சம் கோரிய வடக்கு-கிழக்கு தமிழர்களில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களின் நிலை தற்போது கவலைக்குரியதாக இருக்கின்றது. ஜெர்மன் நாட்டில் புகலிடம் நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை இலங்கைக்கு மீளவும் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை ஜெர்மன் அரசு ஆரம்பித்துள்ளது. இந் நடவடிக்கையின் முதல்கட்டமாக சுமார் முப்பது புகலிடம் நிராகரிக்கப்பட்ட இலங்கை தமிழர்கள் ஜெர்மனியிலிருந்து இவ்வாரம் கொழும்புவந்து சேர்வார்கள் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கு ஜெர்மனியிலிருந்து திருப்பியனுப்பப்படவுள்ள இவர்கள் தற்போது பாதுகாப்பான முறையில் சில இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் இவ்வாரம் கொழும்புக்கு திருப்பியனுப்பப்படவுள்ளவர்கள் ஜெர்மனியில் டுசில்டோவ் விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிரியநெருக்கடி**

மத்தியகிழக்கில் குறிப்பாக, சிரியாவில் மோசமான யுத்தநிலபரம் காணப்படுகின்ற நிலையில் ஏராளமான சிரிய அகதிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்திருந்தனர். ஜெர்மனியிலும் ஏராளமானவர்கள் புகலிடம் தேடியிருந்தனர். எனவே, புகலிடம் நிராகரிக்கப்பட்ட இவர்கள் தற்போது சிக்கல்களுக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த மூன்று தசாப்த காலங்களில் ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடியோரில் இலங்கையை சேர்ந்தவர்களேஅதிகமாக இருக்கின்றனர். இலங்கையில் யுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்த நிலையில் ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து புகலிடம் பெற்றபெரும்பாலான இலங்கையர்கள், தாம் வாழுகின்ற நாடுகளில் ஏனைய நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களைவிட தரமான வாழ்க்கைத்தரத்தை கொண்டுள்ளதோடு, சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோராகவும், கல்வித் துறையில் சிறந்துவிளங்குவோராகவும் இருந்துவருகின்றனர். இருந்தபோதிலும், உருப்படியான மனிதாபிமான காரணங்கள் இன்றி, பொருளாதார ரீதியான காரணங்களின் அடிப்படையில் அடைக்கலம் தேடியோர் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பதோடு, இவ்வாறானவர்களில் அநேகர் யுத்தம் முடிவுக்குவந்த பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு வந்துசேர்ந்தவர்களாகவுமிருக்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் மாத்திரமன்றி கனடா, அவுஸ்திரேலியா, ஸ்கன்டிநேவியா, நியூசிலாந்துபோன்ற இடங்களிலும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் எண்ணிக்கை அதிகமானதாகவே இருக்கின்றது.

**பரிதாபகரமானநிலை**

ஜெர்மனியிலிருந்து திருப்பியனுப்பப்படவுள்ள அடைக்கலம் நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களின் நிலை பரிதாபகரமானதாகவே இருக்கின்றது. ஏனெனில், இவர்களில் பெரும்பாலானவர்கள் சட்டவிரோதமான முறையிலேயே ஐரோப்பிய நாடுகளுக்கு நுழைந்தோராக இருக்கின்றனர். அத்துடன், இலங்கையில் தமது சொத்துக்கள், உடமைகளைக்கூட இலட்சக் கணக்கான பெறுமானத்தில் விற்பனைசெய்தே அவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைந்திருந்தனர். ஆனால், ஜெர்மனி மாத்திரமல்ல.சுவிற்சர்லாந்து மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் புகலிடம் நிராகரிக்கப்பட்டோரை திருப்பியனுப்ப முடிவு செய்துள்ளதையே அவதானிக்கமுடிகின்றது.

வளர்ச்சிகண்ட ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளுக்கு புகலிடம் தேடுவோரை கொண்டுசென்று விடுவதில் ஒரு வலைப் பின்னலான மோசடி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதையே அவதானிக்கமுடிகிறது. இந்தவலைப் பின்னலின் பின்னணியில் இருப்போர் ஒரு நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழல்களுக்கு மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்குவதன்மூலம் ஆட்கடத்தல் நடவடிக்கைகள் மற்றும் சட்டவிரோத கடல் பயணங்கள், விமான பயணங்கள் என்பவற்றையும் ஒழுங்குசெய்வோராக காணப்படுகின்றனர். கடந்த காலங்களில் இவ்வாறு ஆட்கடத்தல் காரர்களால் ஏமாற்றப்பட்டு, பலஅனர்த்தங்களுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கைகூட அதிகமானதாகவே இருக்கின்றது. அவுஸ்திரேலியாபோன்ற நாடுகள் தமது கடலோர பாதுகாப்பு படைகளைக்கூட பலப்படுத்தி, சட்டவிரோதமாக தமது நாட்டிற்குள் நுழைய முற்படுவோரை தடுத்துவருகின்றன.

தற்போது ஜெர்மன், தனதுநாட்டிற்குள் பிரவேசித்து புகலிடம் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பியனுப்பும் நடவடிக்கையை துரிதப்படுத்த ஆரம்பித்துள்ளது. இதன் காரணமாக புகலிடம் நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் பலரும் ஜெர்மனியில் கைதுசெய்யப்பட்டு, இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுவதற்காக பல்வேறு இடங்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கில் ‘மழைவிட்டும் தூவானம் நின்றுவிடாதது போலவே’ நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில், இலங்கைக்கு திருப்பியனுப்பப்படவுள்ள புகலிடம் நிராகரிக்கப்பட்டுள்ளோரின் பாதுகாப்பை இலங்கை அரசு உறுதிசெய்யவேண்டியது இன்றியமையாததாகின்றது.

**மனிதாபிமான அணுகுமுறை**

பாதுகாப்பு கெடுபிடிகள், விசாரணைகளென்று அச்சுறுத்தலுக்குள்ளாகும் சூழல்களும் பலமாகவே இருக்கின்றன. எனவே ‘வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சுவதுபோல’ இலங்கையரசு நடந்துகொள்ளாது, புகலிடம் நிராகரிக்கப்பட்டு தாயகம் திரும்புவோரை

(15ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்** முயற்சிகளில் ஓரளவுக்காவது அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும்.

**இடபம்** பிள்ளைகளின் உதவிகள் கிடைத்து நெகிழ வைக்கும். வீடு கட்டுவதற்கான துவக்க வேலைகளை தொடங்குவீர்கள். வரவேண்டிய பணம் அசல், வட்டியுடன் வசூலாகும்.

**மிதுனம்** குழந்தை பாக்கியம் எதிர்பார்த்தவர்கள் மகிழ்வீர்கள். சுபநிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை இன்று செய்வீர்கள். பங்கு வர்த்தகத்தில் ஏற்ற, இறக்கம் இருக்கும்.

**கடகம்** வயிறு சம்பந்தமான பிரச்னையை தவிர்க்க கவனமாக இருங்கள். கொடுக்கல் வாங்கலில் எதிர்பார்த்த லாபத்தைப் பெற முடியும். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும். வெற்றி பெருமிதம் ஏற்படும்.

**சிம்மம்** வாரக்கடைசியில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிறருக்கு உதவுவீர்கள். உங்களின் வழி காட்டிகளுக்கும் மரியாதை செய்யுங்கள். திட்டமிட்ட விஷயத்தில் சிறு சிறு மாற்றம் ஏற்படும்.

**கன்னி** திட்டமிட்ட விஷயங்களை முடிக்க முடியாமல் போகலாம். கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்பட்டாலும் வாங்காமல் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் விற்பனை சற்று குறைவாகத் தான் இருக்கும்.

**துலாம்** நண்பர்களின் உதவிகரமான செயல் மனம் நெகிழ வைக்கும். சொத்து விஷயங்களில் சிந்தித்து செயல்படுவது நல்லது. மனதில் திருப்தி நிலவும். வாகன பிரச்னை தீரும்.

**விருட்சிகம்** உற்றார் உறவினர்கள் ஓரளவுக்கு அனுகூலமாக இருப்பார்கள். பூர்வீக சொத்துகளில் முறையான தனலாபம் கிடைக்கும். முன்பிருந்த சோர்வு நீங்கி உற்சாகமாகக் களம் இறங்குவீர்கள்.

**தனுசு** பணியிடத்தில் இருந்த குழப்பம் தீர்ந்து தெளிவு பிறக்கும். அதிர்ஷ்டமான நாள். புதிய பொருள் ஒன்று வந்து சேரும். புதிய வேலை பற்றிய தகவல் கிடைக்கும். நிம்மதி மீளும்.

**மகரம்** முந்தைய கோபம் குறையும். புதிய நட்பு கிடைக்கும். நட்பால் நன்மைகள் நடைபெறும். கடன் வசூலாகும். பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர்.

**கும்பம்** பிறரை நம்பி பெரிய தொகையைத் தர வேண்டாம். பணியிடத்தில் வம்பு பேசாமல் வேலையில் கவனம் செலுத்துங்கள். உடன்பிறந்தோர் உறுதுணையாக இருப்பர். நிதி நிலை உயரும்.

**மீனம்** கடனுதவிகள் கிடைக்கும். புதிய நண்பர்கள் சேருவார்கள். வெளிநாட்டு தொடர்புடைய வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு காரணமாக வெற்றி உண்டு.

# கண்ணியக்குறைவான சொற்களை தி.மு.கவினர் பயன்படுத்தக்கூடாது!

## கட்சி தலைவர் ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, மார்ச் 29

தி.மு.கவினர் பிரசாரத்தின் போது கண்ணியக் குறைவான சொற்களைப் பயன்படுத்தக் கூடாது என்று அந்தக் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "மக்களிடையே தி.மு.கவினர் பிரசாரம் செய்யும்போது கட்சியின் மரபையும் மாண்பையும் மனதில் வைத்துச் செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறேன். வெற்றிக்கு முன், வெற்றிக்கான பாதையும் முக்கியமானது என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

பிரசாரத்தின்போது உணர்ச்சி வசப்பட்டு, கண்ணியக் குறைவான சொற்களை வெளிப்படுத்தக்கூடாது. அப்படிப்பட்ட சொற்கள் உதிர்த்திடுவதைக் கண்டிப்பாகத் தவிர்த்திட வேண்டும். அத்தகைய பேச்சுகளைத் தி.மு.க. தலைமை ஒருபோதும் ஏற்காது.

தி.மு.க. கூட்டணியின் வெற்றி உறுதியாகவும் வலிமையாகவும் மக்களால் தீர்மானிக்கப்பட்டு விட்ட நிலையில், தி.மு.கவினர் பேச்சுகளைத் திரித்து, வெட்டி - ஒட்டி, தவறான பொருள்படும்படி செய்து மேற்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் எண்ணம் ஈடேறாத வகையில், கவனத்துடன் சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்று ஸ்டாலின் கூறியுள்ளார். (ஐ)



## தோசை சுட்டுக் கொடுத்து ஆதரவு திரட்டினார் குஷ்பு!

சென்னை, மார்ச் 29

சென்னை, ஆயிரம் விளக்கு தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் குஷ்பு, சாலையோர உணவகத்தில் தோசை சுட்டுக் கொடுத்து வாக்குச் சேகரித்தார்.

நேற்று அப்பகுதியில் தீவிர பிரசாரத்தில் குஷ்பு ஈடுபட்டார். இதன் போது, மேள தாளத்துடன் நடனமாடி வந்த இளைஞர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். பின்னர், சாலையோர உணவகத்தில் தோசை சுட்டுக் கொடுத்து அங்கு வந்தவர்களிடம் வாக்குச் சேகரித்தார். (ஐ)

## காங்கிரஸ் இனத்தை அழித்தது! பாரதிய ஜனதா மனிதகுல எதிரி!!

### சீமான் சாடல்

சென்னை, மார்ச் 29

காங்கிரஸ் எங்கள் இனத்தை அழித்தது. பா.ஜ.க. மனிதகுல எதிரி இந்தக் கட்சிகளுடன் கூட்டணி வைக்கமாட்டேன் என்று ஸ்டாலின் சொல்வாரா என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான்.

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'பா.ஜ.கவுக்குக் கதவு திறந்துவிட்டவர்கள் அ.தி.மு.க.வும், தி.மு.கவும்தான். அந்தக் கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி. நட்டா எத்தனை முறை இங்கு வந்தாலும், நோட்டாவுக்குக் கீழ்தான் பாஜகவுக்கு வாக்குகள் விழும். தமிழ் மண்ணில் தாமரை மலராது' இப்படிக் கூறியுள்ளார் சீமான்.

## முதலமைச்சருக்கு அவதூறு ராசா, லியோனி மீது புகார்!

சென்னை, மார்ச் 29

தமிழக முதலமைச்சர் பழனிச்சாமியை அவதூறான வார்த்தைகளை பயன்படுத்தி பேசினர். இது இந்திய தேர்தல் விதிகளை மீறுவதாக உள்ளது என்று அ.தி.மு.க. தமிழக தேர்தல் பிரிவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் கடந்த 26ஆம் திகதி பிரசாரம் செய்த தி.மு.க. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா மிக மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி பிரசாரம் செய்தார்.

அவரின் பேச்சு முதலமைச்சரையும் - எமது கட்சியையும் - இந்திய தேர்தல் விதிகளையும் மீறுவதாக உள்ளது என்று கூறப்பட்டது.

இதேபோன்று, தி.மு.க.வின் பேச்சாளரான திண்டுக்கல் லியோனி, கோவை பிரசாரத்தில் பெண்களை ஆபாசமாக சித்தரித்து பேசினார். எனவே, இவர்கள் இருவரும் இந்திய தேர்தல் விதிகளை மீறியுள்ளனர். இருவரும் தொடர்ந்து பிரசாரத்தில் ஈடுபடத் தடை விதிக்க வேண்டும் - என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஊழலுக்கு மாற்றுத் தெரிவு இன்னோர் ஊழல் ஆட்சியா?

### கமல்ஹாசன் கேள்வி



சென்னை, மார்ச் 29

ஊழலுக்கு மாற்று இன்னோர் ஊழல் ஆட்சியா என கேள்வி எழுப்பிய மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன், இன்னோர் ஊழல் ஆட்சியை கொண்டு வர துணை போக வேண்டாம் என தெரிவித்துள்ளார்.

ஊட்டியில் நேற்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பணப் புழக்கத்தை தவிர்த்தால்தான் நேர்மையான அரசியலை கொண்டு வர முடியும். கருத்து கணிப்பு இல்லை. கருத்து திணிப்பு என்பதைதான் ஆரம்பத்திலிருந்து சொல்லி வருகிறேன். வருமான வரி சோதனையில், சோதனை செய்ய வேண்டிய இடத்தில் முறையாக சோதனை நடத்த வேண்டும். இந்த சோதனையில், கடைமையை செய்யும் ஒரு கூட்டம் உள்ளது. ஏவி விடும் ஒரு கூட்டம் உள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாவையூர் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 29

வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தனின் வரலாறு, மாவிட்டபுரத்தின் வரலாற்றையும் கூறும் மாவையூர் நூல் வெளியீட்டு விழா நேற்று கந்தசுவாமி கோயில் யாத்திரிகர் மடத்தில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழகத்தின் சைவ சிந்தாந்த முதுகலைமானி குணரட்ணம் கோபிராஜ் எழுதிய இந்த நூலின் வெளியீட்டு விழாவுக்கு, மாவைக் கந்தனின் ஆதீனகர்த்தா மகாராயசிறி இரத்தினசபாபதி குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், யாழ். பல்கலைக்கழகத்தின் சைவசிந்தாந்ததுறை தலைவர் கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன் தெல்லிப்பழை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சமய, சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-3)

# பி.சி.ஆர். பரிசோதனைக்காக விதிகளை மறந்து கூடிய மக்கள்

## சுகாதார அதிகாரிகளும் அசிரத்தை



**யாழ்ப்பாணம், மார்ச் 29**

**யாழ்ப்பாணம் மாநகரின் மத்திய பகுதியில் நேற்று பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது. இதற்காக சுகாதார விதிகளை முற்றாகப் புறந்தள்ளி ஏராளமானவர்கள் கூடினர். இது தொடர்பில் சுகாதார அதிகாரிகளும் அசிரத்தையாக செயல்பட்டனர் என்று கூறப்படுகின்றது. யாழ்ப்பாணம் மாநகரின் சந்தைப் பகுதியில் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.**

இதையடுத்து யாழ்ப்பாணம் மாநகரின் மத்திய பகுதி கடந்த வெள்ளிக்கிழமை முதல் முடக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பி. சி. ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்த பின்னர் தொற்று பாதிப்பு இல்லாத வர்த்தக நிலையங்களை மீளவும் திறக்க அனுமதி அளிக்கப்பட்டது.

இதற்காக நேற்றுக் காலை விசேடமாக 3 இடங்களில் பி. சி. ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து வர்த்தகர்கள், வர்த்தக பணியாளர்கள் என ஏராளமானவர்கள் அங்கு ஒன்றுகூடினர். இவ்வாறு ஒன்றுகூடியவர்களில் பலர் மாஸ்க் அணிந்திருந்தபோதும் சமூக இடைவெளியை முற்றாகக் கடைப்பிடிக்கவில்லை. நெருக்கியடித்த மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்தி, அவர்களை சமூக இடைவெளியை பின்பற்றவோ அல்ல கை கழுவுதல் உள்ளிட்ட விதிகளை பின்பற்ற செய்யவோ சுகாதார அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்தப் பரிசோதனை யாழ்ப்பாணத்தில் இன்னொரு கொரோனா கொத்தணியை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தடை செய்யப்பட்ட மீன்பிடியில் ஈடுபட்டவர்களின் வாடிக்கு தீ!

## வடமராட்சி கிழக்கில் நேற்று சம்பவம்!!

வடமராட்சி, மார்ச் 29

வடமராட்சி கிழக்கு - மணற்காட்டில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலை மீன்பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் தங்கியிருந்த வாடி இனம் தெரியாதவர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் சுருக்கு வலையை பயன்படுத்தி சட்ட விரோத தொழில் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், இவ்வாறு சட்டவிரோத மீன் பிடியில் ஈடுபட்டவர்கள் குடத்ததனை மற்றும் பொற்பதி ஆகிய கடற்கரைகளில் இராணுவ முகாமை அண்மித்து வாடிகளை அமைத்து தங்கியிருந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவ்வாறு மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் சுருக்குவலை பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கும் அங்கிருந்து வெளியேறவும் இருநாள் அவகாசம் குடத்தனை, பொற்பதி மீனவர்களால் வழங்கப்பட்டது. நேற்றுடன் அந்தக் கெடு முடிவடைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டத்தை மீறிய 37 பேருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு!

வடமராட்சி, மார்ச் 29

நெல்லியடி போக்குவரத்து பொலிஸாரால் 37 பேருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, வாகன அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, தலைக்கவசம் அணியாமல் வாகனம் செலுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

இவர்களில் 18 பேர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். 19 பேர் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கவில்லை.

சமுகமளிக்காதவர்களுக்கு நீதிவான் பிடியாணை பிறப்பித்துள்ளார். ஏனைய 18 பேருக்கும் 5 இலட்சத்து 82 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு கடும் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும் நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தொல்பொருள் பாதுகாப்பில் தெற்கை போன்றே வட, கிழக்கை அணுகுகிறோம்!

## தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் விளக்கம்

கொழும்பு, மார்ச் 29

தொல்பொருள் இடங்களைக் கண்டறிந்து அகழ்வுகள் மற்றும் பாதுகாத்தல் செயல்பாடுகளை கையாள்வதில் பாகுபாடு காண்பிக்கவில்லை. தெற்கைப் போன்றே வடக்கு, கிழக்கையும் அணுகுகின்றோம் என்று தொல்பொருள் துறை திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அநுர மனதுங்க தெரிவித்தார்.

உருத்திரபுரம் சிவன் கோவில் மற்றும் நிலாவரைப் பகுதிகளில் தொல்பொருள் சான்றுகளைக் கண்டறிந்து பாதுகாப்பதற்காகவே அகழ்வாராய்ச்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளதே தவிர, குறிப்பிட்ட இனத்தையோ, மதத்தையோ இலக்கு வைத்து எவ்விதமான முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை என்றும் கூறினார்.

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன், புத்தூர் நிலாவரை உள்ளிட்ட பகுதிகளில் தொல்பொருள் திணைக்களம் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். தொல்பொருள் திணைக்களம் சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்பு நோக்கில் செயல்படுகின்றது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். இது தொடர்பில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எமது திணைக்களத்தின் பிரதான பணியாக இருப்பது இந்த நாட்டின் வரலாற்றுத் தொன்மம் வாய்ந்த பகுதிகளை அடையாளம் கணலும் முறையாக பாதுகாத்தலும் ஆகும். அப்பகுதிகளிலிருந்து மீட்கப்படும் பொருட்களை பத்திரப்படுத்தி வரலாற்றுத் தொன்மங்களை அழிவுறாது பேணுவதே எமது கடமையாகின்றது. அந்தப் பணியையே நாம் முன்னெடுத்து வருகின்றோம். இதில் எவ்விதமான இன, மத ரீதியான பாகுபாட்டினைக் காண்பிக்கவில்லை.

தெற்கில் எவ்வாறு புராதனப் பகுதிகளை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோமோ அதேபோன்று தான் வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். வடக்கு, கிழக்கில் காணப்பட்ட அசாதாரண நிலைமைகளால் அங்குள்ள தொல்பொருள் பகுதிகள் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது அதற்காக விசேட நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிலபகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்படாமை உள்ளிட்ட பிரச்னைகளும் உள்ளன. எவ்வாறாயினும் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தொல்பொருள்களும் இடங்களும் உரிய வகையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எமது கரிசனை. கோவில்களில் தொல்பொருள்களை அடையாளப்படுத்துவதற்கான முயற்சிகள் ஒரு மதத்தை இலக்கு வைத்த நடவடிக்கை அல்ல. தென்னிலங்கையில் பௌத்த விகாரைகளுக்குள் இந்துக்கோவில்கள் உள்ளன.

ஆகவே, அவ்விதமாக காணப்படுவதால் எவ்விதமான பிரச்னைகளும் இல்லை. எனவே, தொல்பொருளியல் செயல்பாடு தொடர்பாக தவறான புரிதலை வடக்கு கிழக்கு சமூகத்தினர் விட வேண்டும் - என்றார். (ஐ)

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

கிளிநொச்சி, மார்ச் 29

மின்னியல் சுத்திகரிப்பு இயந்திரத்தால் வாகனத்தை கழுவியவர் மின்சாரம் தாக்கிப் பலியானார்.

கிளிநொச்சி - பாரதிபுரத்தில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் இராசலிங்கம் ஜெயபாலன் (வயது 39) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கலுக்கு குடும்பத்தினருடன் செல்வதற்காக வாகனத்தைக் கழுவிக் கொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

முறையற்ற விதத்தில் சுத்திகரிப்பு இயந்திரத்துக்கு மின் இணைப்பு வழங்கியதே இதற்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# பரிசளிப்பு விழா ஒத்தி வைப்பு!

கோப்பாய், மார்ச் 29

புத்தூர் பொதுநூல் நிலையத்தால் புத்தூர் சிறிசோமாஸ் கந்தக் கல்லூரி மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை நடத்தப்படவிருந்த வாசிப்பு மாத பரிசளிப்பு விழா ஒத்திவைக்கப்பட்டதாக நூலகர் காஞ்சனமாலா உதயகுமார் அறிவித்துள்ளார்.

புத்தூர் பொதுநூல் நிலையம் வாசிப்பு மாதத்தில் நடத்திய போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவும், “புதுவை நாதம்” சஞ்சிகை வெளியீடும் இன்று புத்தூர் சிறிசோமாஸ் கந்தக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணேசபுரம் கிராமத்தின் பிரதான வீதி அபிவிருத்தி!

### மஸ்தான் எம்.பி. ஆரம்பித்து வைத்தார்

வவுனியா, மார்ச் 29

வவுனியா - கணேசபுரம் கிராமத்தின் பிரதான வீதிக்கான அபிவிருத்தி பணி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. மஸ்தானால் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதி புனரமைப்பின் ஒரு கட்டமாக கணேசபுரத்தில் இரண்டு கிலோ மீற்றர் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. பெருந்தெருக்கள் அமைச்சின் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொள்ளவுள்ள இப் புனரமைப்பு பணி 58.2 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

இதன், ஆரம்ப நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தான், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர், கிராமத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)




# பால்பண்ணை கிராமத்தில் விழிப்புணர்வு செயல்பாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து திருநெல்வேலி - பால்பண்ணை கிராமத்தில் நேற்று விழிப்புணர்வு செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

திருநெல்வேலி பால்பண்ணை கிராமத்தில் 51 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணியினர் இந்தக் கிராமத்தை கண்காணிப்பு வலயமாக அறிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நேற்று அப்பகுதிக்கு சென்ற யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தலைமையிலான அனர்த்த முகாமைத்துவ குழு, கோப்பாய் பொலிஸார் இணைந்து கொரோனா விழிப்புணர்வு செயல்பாடுகள் தொடர்பில் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புக்களை செய்தனர். (ஐ -3)

# எங்கள் பிரச்னைகளுக்கான தீர்வை அமெரிக்க தலையீட்டாலேயே முடியும்

### 1500ஆவது நாளில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தில் அழைப்பு

வவுனியா, மார்ச் 29

**காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகள் விடயத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் தலையிட வேண்டும். அவர்களால் மட்டுமே எமது பிரச்னைக்கு தீர்வு ஒன்றைப் பெற்றுத்தர முடியும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.**




காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில் மேற்கொண்டு வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று 1,500 ஆவது நாளை எட்டியது. இதையொட்டி நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் வணங்கி ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட பேரணி, மணிக்கூட்டு கோபுர வீதி ஊடாக ஊர்வலமாக வந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்ட கொட்டகை அமைத்து போராடும் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக நின்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றின் கொடிகளை ஏந்தியிருந்ததுடன், எங்களுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா தேவை என்ற பதாதைகளை ஏந்தியிருந்தனர். இதன்போது தாய்மார் கண்ணீர் மல்க கதறி அழுது தமது பிள்ளைகள் தமக்கு வேண்டும் எனக் கோரியிருந்தனர். (ஐ)

## விசேட கருத்தமர்வு

வவுனியா, மார்ச் 29

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மகளிர் தினத்தையொட்டி விசேட கருத்தமர்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா உள்வட்ட வீதி பலநோக்கு மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ராலின் டிமெல் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் வளவாளர்களாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் விநோதன், வடமாகாண கிராம அபிவிருத்தித்திணைக்கள பணிப்பாளர் திருமதி நாளாயினி இன்பராஜ், உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சகிலா பாணு ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ஐ)

# முக்கொம்பன் கிராம வீதியை திருத்துவதற்கு நடவடிக்கை!

கிளிநொச்சி, மார்ச் 29

கிளிநொச்சி - முக்கொம்பன் கிராமத்துக்கான வீதியை உடனடியாக திருத்தம் செய்ய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

முக்கொம்பன் கிராமத்துக்கான வீதி மிகவும் சேதமடைந்திருப்பதாக, அப்பகுதி பொதுமக்கள் தொடர்ச்சியாகத் முன்வைத்து வந்த முறைப்பாடுகளை அடுத்து, அந்த வீதியை பார்வையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்தார்.

இதையடுத்து, அவரது மேலதிக இணைப்பாளர் கோ. றுஷாங்கன் நேரடியாக அந்த வீதியைச் சென்று பார்வையிட்டு நிலைமையை ஆராய்ந்தார்.

இதைத் தொடர்ந்தே அந்த வீதியை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன், ஐறோட் வேலைத்திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ள இந்த வீதிக் கட்டுமானப் பணிகளை, தாமதமின்றி ஆரம்பிக்குமாறும், வீதிக் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க முன்னதாக குண்டும் குழியுமாகக் காணப்படும் வீதியை முதலில் மட்டப்படுத்தி மக்களின் உடனடி பாவனையை இலகுவாக்குமாறும் அவர் கூறியுள்ளார்.(ஐ)



# கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு வவுனியாவில் நினைவுதினம்!

வவுனியா, மார்ச் 29

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் நினைவு தின நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார் தலைமையில் வவுனியா நகரப் பகுதியில் உள்ள கம்பனின் உருவச்சிலையடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் பார்த்தீபன் சிறப்புரை ஆற்றினார்.

இந் நிகழ்வில் செட்டிக்குளம் பிரதேசசபை தவிசாளர் ஜெகதீஸ்வரன், நகரசபை உறுப்பினர்கள், தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் பார்த்தீபன், மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# தடை செய்யப்பட்ட மீன்பிடி: 20 பேருக்கு எதிராக வழக்கு!

கிளிநொச்சி, மார்ச் 29

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் நேற்று வரையான காலப் பகுதியில் சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் 20 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேசத்திலும் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும், குறிப்பிட்ட சில இடங்களில் சட்டவிரோத தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு சட்டவிரோத தொழிலில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே, கடந்த ஜனவரி முதல் நேற்று வரை 20 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, சிலிண்டர் பயன்படுத்தி அட்டை பிடித்தல், தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பாவித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவே இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு ஆதரவு இல்லாமல் யாரும் கிழக்கு முதல்வராகியிருக்க முடியாது!

## பழையவற்றை மறக்க கூடாது என்கிறார் ஹக்கீம்

அம்பாறை, மார்ச் 29

**தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவில்லாமல் எவராலும் கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சராக வந்திருக்க முடியாது எனவும் இப்போது புதிய எஜமானர்களை கண்டதும் அதனையெல்லாம் மறந்து விட்டார்கள் எனவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

அத்துடன், நாடு முழுவதிலும் இருந்து வரும் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதில் போட்டி போட்டுக்கொண்டு சிலர்ஜனாஸா அடக்கம் செய்யும் இடத்திற்கு சென்று படம் காட்டுகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில், நேற்று நடைபெற்ற சம்மாந்துறை பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் குழுமத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "தேவை இல்லாமல்



வாய் உளறி பிரச்சினைக்குள் மாட்டிக்கொள்கின்றனர். அங்கும் இங்குமாக இப்போது தலைவரையும் வம்புக்கு இழுக்கின்றனர். இதன் பின்னணி என்ன என்பதை நான் நன்றாக அறிந்துள்ளேன். இந்த நாட்டின் ஆட்சியாளர்களின் போக்கை அறிந்து வைத்துள்ளேன். கட்சியை பல தடவை நீதிமன்றத்தில் நிறுத்தியவர்களும் இவர்களே ஆவர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியாளர்களுடன் வாய்திறப்பதில்லை, யாரையும் தேவையில்லாமல்மலினப்படுத்தவும்இல்லை. பலருக்கும் பல பிரச்சினைகள் இருக்கிறது. பிராந்திய ரீதியான பிரச்சினை, அவர்களுடைய அரசியல் தொடர்பிலான பல சிக்கல்கள் இருக்கலாம். அதைப் பற்றி தாராளமாக தெரிந்தவன், புரிந்து கொண்டவன் என்ற அடிப்படையில் விட்டுக்கொடுப்புக்களை செய்து கொண்டுதான் இருக்கிறேன். நான் யாரையும் அவசரப்பட்டு கட்சியை விட்டு விரட்ட விரும்புவதில்லை. அவர்களாகவே அவர்களை விரட்டக்கூடிய நிலைமையை உருவாக்காமல் இருப்பது நல்லது" என்றார்.



## இத்தி குளத்தில் குளித்த சிறுவன் முதலைக்கு இரை

திருகோணமலை, மார்ச் 29

சம்பூர் இத்தி குளத்தில் குளித்துக் கொண்டிருந்த சிறுவன் முதலையிடம் அகப்பட்டு உயிரிழந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், தோப்பூர்-பள்ளிக்குடியிருப்பு இத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த கோணலிங்கம் லேனுஜன் (வயது 15 ) என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இத்தி குளத்தில் இரு சிறுவர்கள் குளித்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவரை முதலை ஒன்று இழுத்துச் சென்றது. தப்பிய மற்றொரு சிறுவன் முதலையிடம் அகப்பட்ட சிறுவனின் பெற்றோரிடம் ஓடிச் சென்று விடயத்தைக் கூறினார்.

இதைத் தொடர்ந்து பொலிஸாருக்கு விடயம் தெரிவிக்கப்பட்டு குளத்தில் தேடும் பணி முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில், முதலை இழுத்துச் சென்ற சிறுவனின் சடலம் கடி காயங்களுடன் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

மரண விசாரணைகளை தொடர்ந்து சிறுவனின் பெற்றோரிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)



## மாமாங்கம் ஆலயத்தில் யோகா, தியான வகுப்புகள்

மட்டக்களப்பு, மார்ச் 29

மட்டக்களப்பு அமிர்தகழி சிறிமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஏற்பாட்டில் தியானம் மற்றும் யோகாசன பயிற்சிகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின. ஆலயத்தின் அன்னதான மண்டபத்தில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் சிறிமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வண்ணக்குமார்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள், பயிற்சியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மனிதர்களுக்கு மிகவும் அவசியமான அமைதி மற்றும் ஆனந்தத்தை அனுபவிக்க ஜெபமும் தியானமும் இன்றிமையாதது. அவற்றை யோக கலை மூலம் ஒருங்கிணைத்து செயற்படுவதன் மூலம் சிறந்த சமூக கட்டமைப்பை உருவாக்க முடியும் என்ற நோக்குடன் சிறிமாமாங்கேஸ்வரர் ஆலயத்தினால் இந்த வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் பயனடையும் வகையில் ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 8.00மணி தொடக்கம் காலை 9.30மணி வரையில் இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ஐ)



ரூபன் சிவா எழுதிய 'உறவுகள் தொடர்கதை' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு தமிழ் சங்க வினோதன் மண்டபத்தில் நடைபெற்ற போது நூலில் முதற் பிரதியை பூ. பாலசிங்கம் சிறிதர் சிங்கிடமிருந்து புரவலர் ஹாசிம் உமர் பெறுவதையும் விழாவுக்கு தலைமை வகித்த வைத்தியகலாநிதி. தி.ஞானசேகரன் தமிழ் சங்க தலைவர் ஆ.குகமூர்த்தி, திருமதி பவானி சிவகுமார் ஏற்பாட்டாளர் கே.பொன்னுத்துரை ஆகியோர் உடன் காணப்படுகின்றன.

## மட்டக்களப்பு நெல் களஞ்சியம் காட்டு யானைகளால் சேதம்!

மட்டக்களப்பு, மார்ச் 29

மட்டக்களப்பில் நெல் களஞ்சியத்தை காட்டு யானைகள் தாக்கி சேதப்படுத்தியுள்ளன.

வெல்லாவெளி - தும்பங்கேணி கிராமத்தில் அமைந்துள்ள நெல் களஞ்சியசாலையே கடந்த வெள்ளிக்கிழமை இரவு யானைகளால் தாக்கி சேதப்படுத்தப்பட்டது.

இதில், களஞ்சிய சாலையின் இரு தூண்கள்முற்றாகவும்மேலும் இரு தூண்கள் பகுதியளவிலும் சேதமடைந்தன. அத்துடன் பிரதேச செயலகத்தின் முயற்சியால் புதிதாக பொருத்தப்பட்ட இரண்டு இரும்பு கதவுகளும் சேதமாக்கபட்டுள்ளது. அத்துடன் மின் இணைப்புகளும் தகர்த்தபட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான தொடர்சம்பவங்கள்இடம்பெறுவதை தவிர்க்க யானை வேலி அமைத்தல் போன்ற நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டியதுடன், தற்காலிக தீர்வாக களஞ்சியசாலையில் உள்ள 200 மெட்ரிக் தொன்னுக்கும் மேற்பட்ட நெல் இருப்பை உடன் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவிக்கு மூவர் சிபாரிசு!

அக்கரைப்பற்று, மார்ச் 29

தென்கிழக்கு பல்கலைக்கழக புதிய துணைவேந்தர் பதவிக்கு நியமனம் செய்வதற்காக மூவரின் பெயர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீட முன்னாள் பீடாதிபதியும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஏ.எம்.றஸ்மி, பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.எம். ஜுனைதீன், கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் ஆகியோரின் பெயர்களே இவ்வாறு விதந்துரைக்கப்பட்டுள்ளன.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது துணைவேந்தரை தெரிவு செய்வதற்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்த நிலையில், 7 பேராசிரியர்கள் மற்றும் 4 கலாநிதிகள் உள்ளிட்ட 11 பேர் விண்ணப்பித்திருந்தனர்.


இதேவேளை தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜீமின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





பிரசித்தி பெற்ற திருகோணமலை சிறிபத்திரகாளி அம்பாள் ஆலய தீர்த்தத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கொரோனா அச்சத்தின் மத்தியிலும் பெருந்திரளான மக்கள் இதில் பங்கேற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகம் சுற்றுகிறது தீர்மானம்! தலையை சுற்றுகிறது அறிக்கைகள்!

பனங்காட்டான்

ஒரு மாதத்துக்குள் மூன்று நான்கு சிறுசிறு திருத்தங்களுக்குட்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இந்த மாதம் 23ம் திகதி நிறைவேற்றப்பட்டது.

பேரவையின் ஆணையாளர் மிச் சேல் பச்சிலடின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட அத்தனை அம்சங்களும் தீர்மானத்தில் இடம்பெறவில்லை. ஆனால், இலங்கை அரசு அடியோடு விரும்பாத சில விடயங்கள் இறுதி வரையில் இணைக்கப்பட்டன.

இந்தத் தீர்மானத்தையொட்டி சமூக ஊடகங்களில் இடம்பெறும் தவறான இரண்டு சொற்பதங்களை முதலில் நோக்க வேண்டும். இலங்கைக்கு எதிரான தீர்மானம், வாக்களிப்பு வெற்றி பெற்றது - இவ்விரு சொற்பதங்களுமே இங்கு கரிசனைக்குட்பட்டவை.

தீர்மானத்தை முன்மொழிந்த பிரித்தானிய அரச பிரதிநிதி தமது உரையின் ஆரம்பத்திலேயே, இது இலங்கைக்கு எதிரான தீர்மானம் அல்ல என்று அழுத்திக் குறிப்பிட்டார்.

சமூக ஊடகங்களில் குறிப்பிடுவதுபோல, இலங்கைக்கு எதிரான தீர்மானம் என்றால், இதனை தாங்கள் ஏற்கவில்லையென்றும், முழுமையாக நிராகரிப்பதாகவும் இலங்கைத் தரப்பு கூறுவதை ஏற்றுக்கொள்ள நேரிடும். எனவே, இலங்கைக்கு எதிரான தீர்மானம் என்பது தவிர்க்கப்பட வேண்டியதும் உண்மைக்குப் புறம்பானதும்.

அடுத்தது, தீர்மானம் வெற்றி என்பது முற்றிலும் தவறான சொற்பதம். வெற்றி தோல்வி சொல்வதற்கு இது தேர்தல் அல்ல. சர்வதேச அரங்கில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் பெரும்பான்மையால் நிறைவேறியது என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும்.

இத் தீர்மானத்தை நிராகரிப்பதாகக் கூறினாலும், சர்வதேச நியமங்களுக்குட்பட்டு இதனை அமல் செய்யும் கடப்பாடு இலங்கைக்கு (விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்) உள்ளது.

இந்தப் பின்னணியில் ஜெனிவா விடயங்களை அணுகுவதே இன்றைய பத்தியின் நோக்கம். தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னைய சில நாட்களாக இலங்கையைத் தளமாகக்கொண்ட இரு தரப்பும் ஏட்டிக்குப் போட்டியாக ஒரு கருத்தை வெளியிட்டு வந்தன.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், அமைச்சின் செயலாளர் உட்பட கோதபாய தரப்பு அரசியலாளர்கள் இந்தியா தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்குமென மீண்டும் மீண்டும் கூறி வந்தனர். இதனூடாக இந்தியாவை அவ்வாறு செய்யத் தூண்டும் ஒரு செயற்பாடாகவும் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால், தமிழர் தரப்பில் கூட்டமைப்பின் பிரதிநிதி சுமந்திரன், தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களிக்குமென அதீத நம்பிக்கை வெளியிட்டு வந்தார். இந்தியத் தரப்பு இரகசியமாக தமக்கு இதனைக் கூறியது போன்று இவர் கருத்துக் கூறிய பாணி தென்பட்டது.

சில பொதுவான தரப்புகள் இந்தியா வாக்களிப்பில் கலந்து கொள்ளாதென கூறிவந்தனர். வாக்களிப்பு இடம்பெறுவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னர்கூட இந்தியா தனது நிலைப்பாட்டை நேரடியாக வெளிக்காட்டவில்லை. ஜெனிவாவில் இந்தியப் பிரதிநிதி உரையாற்றும்போது பூனை சாக்குக்கு வெளியே வந்தது.

இந்தியா இரு தரப்பையும் நம்ப வைத்து ஏமாற்றிக் கைவிட்டபோதிலும், இரு தரப்பும் அதை தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொண்ட அரசியல் சித்து விளையாட்டை என்னென்று சொல்லலாம். இந்திய விவகாரத்தில் வழமையான அரசியல் பம்மாத்து ஆரம்பமானது. இதில் முக்கியமானது இந்தியா நடுநிலைமை வகித்தது என்று இரு தரப்பும் சொல்லிக் கொண்டது. இதனாற்போலும் இரு தரப்புமே சமவேளையில் இந்தியாவுக்கு நன்றி தெரிவித்து அறிக்கைகள் விட்டன.

இலங்கை அரச சார்பில் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன இந்தியாவுக்கு வாக்களிப்பில் பங்குபற்றாமைக்கு நன்றி கூறினார். கூட்டமைப்பின் சுமந்திரன் மூன்று காரணங்களை முன்வைத்து இந்தியாவுக்கு நன்றி கூறினார்.

தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்தியா செயற்பட்டது, பதின்மூன்றாம் திருத்தத்தின் பிரகாரம் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வைக் கோரியது. மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வேண்டியது என்பவற்றுக்காக இந்தியாவுக்கு நன்றி என்றார் இவர்.

சுமந்திரனின் நன்றி போதாது என்று எண்ணியோ என்னவோ, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் தமது பங்குக்கு ஓர் அறிக்கை வெளியிட்டார். ஜெனிவாவில் இந்தியா குறிப்பிட்ட விடயங்களை இலங்கை அரசு முழுமையாக செயற்படுத்த வேண்டுமென்பது இவரது அறிக்கை.

போர்க்குற்றம், பொறுப்புக்கூறல், சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறை என்ற ஜெனிவா அம்சங்களில் எதையுமே குறிப்பிடாத இந்தியா, வழமையான 13 தாலாட்டையே இங்கும் பாடிவிட்டு ஜெனிவாவிலிருந்து தப்பி விட்டது.

முள்ளிவாய்க்கால் பேரழிவுக்கு முன்னின்று இலங்கைக்கு உதவி வழங்கிய 32 நாடுகளில் முதன்மையானது இந்தியா. ஆயுதம், இராணுவம், புலனாய்வு, காட்டிக்கொடுப்பு, வக்காலத்து என்று சகல வளங்களையும் இந்தியா தந்ததென்று இலங்கை எத்தனை தடவை குறிப்பிட்டிருக்கும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஜெனிவா தீர்மானத்தின் வழியாக இந்தியாவை காப்பாற்றி விட்டது என்று குற்றம் சுமத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்கள் தங்களுக்குள் மோதுப்பட்ட வரலாறை, இன்று தமிழீழ மண்ணில் மூன்று தமிழ்த் தேசிய கட்சிகளும் பின்பற்றும் கைங்கரியம் இடம்பெறுகிறது.

இன்றைய நிலையில் ஆகக்குறைந்தது தமிழர் நிலம், தமிழர் உரிமை, தமிழர் எதிர்காலம் என்ற அடிப்படையில் இவர்கள் மூவரும் இணைந்து செயற்படாதவிடத்து இலங்கைக்கு வெற்றி மேல் வெற்றியே கிடைக்கும்.

ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றல் தொடர்பான அதிசயக் கணக்கொன்றை இலங்கை அரசு வெளியிடுமென எதிர்பார்த்தது பொய்யாகவில்லை. 47 நாடுகளில் 22 தீர்மானத்தை ஆதரித்தன. 11 எதிர்த்தன. 14 வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. தீர்மானம் 11 வாக்குகளால் நிறைவேறியதென அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

நாங்கள் அறிந்த எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திரகணிதம், மனக்கணிதம் என்பவற்றுக்கு அப்பால் அரசியல்கணிதம் என்றும் ஒன்று இருப்பதை இலங்கை அறியத்தந்துள்ளது. அதாவது, 47 நாடுகளில் 22 மட்டுமே தீர்மானத்தை ஆதரித்ததால் 25 நாடுகள் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்பதே கோதபாய தரப்பின் அரசியல் கணக்கு. எத்தனை காலம்தான் சிங்களச் சனங்களை இப்படி ஏமாற்றப் போகிறார்களோ?

ஜெனிவாவில் இப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மான இலக்கம் 46:1. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்பது இதன் தலைப்பு வாசகம்.

2015ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை அரசுகள் அலட்சியப் படுத்தி வந்தமையினாலேயே புதிய தீர்மானம் வந்தது என அமெரிக்க தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் சுட்டியுள்ளார்.

தங்கள் நாட்டினால் இணைஅனுசரணை வழங்கிய பொறுப்புக்கூறலை, அது வேறு அரசு (மைத்திரி-ரணில்), இது வேறு அரசு (ராஜபக்சக்கள்) என்று காரணம் கூறி தீர்மானத்தை இலங்கை அரசு நிராகரிக்கிறது. போர்க்குற்றம் இடம்பெற்ற காலத்தில் ஜனாதிபதியாக இருந்தவர் மகிந்த ராஜபக்ச. போர்க்குற்றம் புரிந்த ராணுவத்தினரையும் படையினரையும் வழிநடத்தியவர் அப்போது பாதுகாப்புச் செயலாளராகவிருந்த தற்போதைய ஜனாதிபதி கோதபாய ராஜபக்ச.

எனவே, பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறைகளை நிறைவேற்ற வேண்டிய தார்மிகப் பொறுப்பு ராஜபக்சக்களுக்கே உண்டு. இதனை மேலும் விளக்கமாகக் கூறுவதானால், ராஜபக்சக்களையே முதலில் குற்றவியல் விசாரணைக் கூண்டில் ஏற்ற வேண்டும். இதனைத் தெரிந்து கொண்டதால்தான் இவர்கள் இத்தீர்மானத்தை முழுமையாக நிராகரிக்கின்றனர்.

இப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இரு விடயங்கள் பல தரப்பினரதும் ஆழ்ந்த கவனத்தைப் பெற்றுள்ளன. தொடர்ந்து இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் விசாரிக்கப்பட வேண்டும். இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக தகவல் மற்றும் ஆதாரங்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், பாதுகாத்தல், பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கான சாத்தியமான உத்திகளை உருவாக்குதல் என்பவை மனித உரிமை ஆணையாளரிடம் அதிகாரபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கென 12 அதிகாரிகளை ஈடுபடுத்த 2.8 மில்லியன் டாலர்களை ஜெனிவா பேரவை வழங்குகிறது. இவ்வருடம் செப்டம்பரில் வாய்மூல அறிக்கையொன்றினை ஆணையாளர் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும். அடுத்த ஆண்டு மார்ச், செப்டம்பர் அமர்வுகளில் உறுப்பு நாடுகளின் விவாதத்துக்கென பூரண அறிக்கையை ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆணையாளர் பச்சிலட் அவர்கள் சிலி நாட்டின் ஜனாதிபதியாக இரு தடவை பணியாற்றிய மனித உரிமை செயற்பாட்டாளர். இவரது தந்தை சிறையில் கொல்லப்பட்டவர். இவர் பல தடவை சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டவர். இதனால் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் மறைவு வாழ்க்கை வாழ்ந்தவர். போர்க்குற்றம், மனித உரிமை மீறல், காணாமலாக்கப்படுதல், சித்திரவதை என்பவைகளை அனுபவத்தால் பெற்றவர். எனவே நேர்மையான நீதியை இவரிடம் எதிர்பார்க்க முடியும்.

ஆனால், இப்பணியை இவரது அலுவலகத்தால் தனித்து செய்துவிட முடியாது. தாயகத்திலும் புலத்திலும் வாழும் தமிழர்கள் இப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும். முள்ளிவாய்க்கால் உறைநிலைக்குப் பின்னர் உலகின் பல நாடுகளில் (கனடா உட்பட) போர்க்குற்றங்கள் தொடர்பான வாய்மூலங்கள், சத்தியப் பத்திரங்கள், ஆவணங்கள் சேகரிக்கப்பட்டது. இவை அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு ஜெனிவாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஜெனிவா தீர்மானம் உலகம் சுற்றி வருகிறது. தமிழ் அரசியல்வாதிகள் தலையைச் சுற்றும் அறிக்கைகளை விட்டு தங்களைப் பிரபல்யப்படுத்துகிறார்கள். இன்றைய தேவை ஜெனிவாவுக்கான தகவல் சேகரிப்பும் ஆவணப்படுத்தலும், உரிய வேளையில் ஒப்படைப்பதுமே.

இதனைச் செய்யத் தவறின் 46:1 அர்த்தமில்லாது போய்விடும். 2022 செப்டம்பருடன் ஜெனிவாக் கதவும் மூடப்படும் நிலை ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓரிரு தினங்களில் விடுதலையான இந்திய மீனவர்கள்

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் காரணமா?



இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டின் கீழ் 54 இந்திய மீனவர்கள் கடந்த 24ஆம்திகதி கைது செய்யப்பட்டு, ஓரிரு நாள்களில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இரண்டே தினங்களில் விடுதலை செய்யப்பட்டமை, பல்வேறு தரப்பினர் இடையே பேசுப்பொருளாக மாறியுள்ளது.

தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே, இந்த 54 மீனவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவாகவோ அல்லது எதிராகவோ வாக்களிக்காததை அடிப்படையாகக் கொண்டு, பழி வாங்கும் வகையில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினால் கைது செய்யப்பட்டதாக தமிழ்நாடு மீன வர்கள் குற்றச்சாட்டுக்களை முன் வைத்திருந்தனர்.

எனினும், தமிழ்நாட்டு மீனவர்களினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை இலங்கை கடற்படை மற்றும் இலங்கை கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் நிராகரித்தி ருந்தனர்.

எனினும், இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட இரண்டே தினங்களில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை, தற்போது பல்வேறு கேள்விகளை தோற்றுவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பாரதீய ஜனதா கட்சி, இந்த தேர்தலில் தமக்கான அங்கீகாரத்தை உறுதிப்படுத்தும் வகையில், இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து, தமிழக மீனவர்கள் விடுதலை செய்துகொண்டுள்ளதாக தற்போது பேசப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வினவியபோது,

இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களை இந்திய அரசாங்கத்தினால் கொடுக்க முடியாது என கூறிய அவர், தமிழக மீனவர்களை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்திருக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

இவ்வாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, இராஜீய ரீதியாக, எச்சரிக்கை விடுத்து மீனவர்களை விடுதலை செய்ததாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாரதீய ஜனதா கட்சி தமிழ்நாட்டில் வெற்றி பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன், இலங்கை அரசாங்கம் இந்த மீனவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாது விடுதலை செய்துள்ளதா என கடற்றொழில் அமைச்சிடம் கேள்வி எழுப்பியபோது,

இதற்கு பதிலளித்த அவர், அவ்வாறு கிடையாது என கூறினார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர நடவடிக்கையாகவே இந்த மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தந்த நாடுகளுக்கு இடையில் அரசியல் தேவை இருக்கலாம் எனவும், அதனடிப்படையிலேயே விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கை - இந்திய மீனவர்களின்பிரச்னை தொடர்பிலான பேச்சுவார்த்தை தற்போது நடைபெற்று வருகின்ற பின்னணியிலேயே, இந்த விடுதலையும் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பின்னரான காலத்தில் இலங்கை கடல் எல்லைக்குள் வருகை தரக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் இந்த 54 மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



# முதல்வர் குறித்த ஆ. ராசாவின் பேச்சுக்கு அதிகரிக்கும் எதிர்ப்பு ஸ்டாலின் எச்சரிக்கை

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

தேர்தல் பிரச்சாரம் ஒன்றில் தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. ராசா முதலமைச்சரைப் பற்றி பேசிய பேச்சு ஒன்று பெரும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது. எதிர்ப்புகள் அதிகரித்த நிலையில், தி.மு.க. தலைவர்கள் அதனைக் கண்டிக்கத் துவங்கியுள்ளனர்.

தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியிருக்கும் நிலையில், கட்சித் தலைவர்கள் பல்வேறு இடங்களில் பேசும் பேச்சுகள் சிறு சிறு வீடியோக்கள் வடிவில் பரப்பப்பட்டுவருகின்றன. இதுபோன்ற பேச்சுகள், சம்பந்தப்பட்ட பேச்சாளர்களுக்கு பிரபலத்தை அளிக்கும் அதே நேரத்தில், கண்ணியக்குறைவாகப் பேசும் பேச்சாளர்களுக்கு சிக்கல்களையும் உருவாக்கிவிடுகின்றன.

சமீபத்தில் தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. ராசா இதுபோன்ற பிரச்சாரக் கூட்டமொன்றில் பேசும்போது, தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினையும் முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமியையும் ஒப்பிட்டுப் பேசினார். அதில் அவர் பயன்படுத்திய சொற்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

**ஆ.ராசா என்ன பேசினார்?**

'ஜனநாயகத்தைக் காப்பாற்ற சிறையில் இருந்தவர் ஸ்டாலின். மாவட்டப் பிரதிநிதி, பொதுக் குழு, செயற்குழு உறுப்பினர் எனப் படிப்படியாக உயர்ந்து தலைவரானவர். ஆட்சி நிர்வாகத்திலும் எம்.எல்.ஏ., மேயர், உள்ளாட்சித் துறை அமைச்சர், துணை முதல்வர் என உயர்ந்தார். இப்போது முதல்வராகப் போகிறார்.

அவர் திணிக்கப்பட்டவர் அல்ல. முறைப்படி பெண் பார்த்து, நிச்சயம் செய்து, திருமணம் நடத்தி, சாந்தி முகூர்த்தம் நடத்தி, 300 நாட்கள் கழித்து சுகப்பிரசவத்தில் பிறந்தவர் ஸ்டாலின்.

ஆனால், ஜெயலலிதா இறக்கும்வரை இ.பி.எஸை யாருக்கும் தெரியாது. இவர் ஊர்ந்துபோய் முதல்வரானார். அதிகாரத்தில் இருப்பதால் அவருக்குப் புகழ். ஓராண்டாக கொடுத்த விளம்பரத்தால் பத்திரிகைகள் அவரை மிகப் பெரிய தலைவரைப் போல சித்தரிக்கின்றன. இ.பி.எஸ் ஸுக்கு என்ன தகுதி, தியாகம் இருக்கிறது. பொதுவாழ்வில் அவர் எட்டியிருக்கிற தொலைவு என்ன? ஒன்றும் கிடையாது.

நல்ல உறவில் ஆரோக்கியமாக சுகப்பிரசவத்தில் பிறந்த குழந்தை ஸ்டாலின் கள்ள உறவில் பிறந்த குறைப் பிரசவம் இ.பி.எஸ். நல்ல குழந்தைக்குத் தாய்ப்பால் போதும். குறைப்பிரசவ குழந்தையைக் காப்பாற்ற தில்லியிலிருந்து மோடி என்கிற டாக்டர் வருகிறார்" என்று தொடர்ந்து பேசினார் ஆ. ராசா.

இதில், நடுவில் உள்ள சில பகுதிகள் நீக்கப்பட்டு, ஆ. ராசாவின் பேச்சு சமூக வலைதளங்களில் பரவத் துவங்கியது. அ.தி.மு.கவினரும் பா.ஜ.கவினரும் இதனைக் கடுமையாக கண்டிக்கத் துவங்கினர். ஏற்கனவே, மு.க. ஸ்டாலினின் அந்தஸ்தையும் எடப்பாடி கே. பழனிச்சாமியின் அந்தஸ்தையும் ஒப்பிட்டு ஆ. ராசா பேசியிருந்த பேச்சும் கண்டனத்திற்குள்ளாகியிருந்தது.

இதையடுத்து, இந்தப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்தார் தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினரும் மகளிரணி செயலாளருமான கனிமொழி. 'அரசியல் தலைவர்கள் யாராக இருந்தாலும் பெண்களை இழிவு படுத்தி தனிப்பட்ட முறையில் விமர்சனம் செய்வது கண்டிக்கத்தக்கது. இதை எல்லோருமே மனதிலே வைத்துக்கொண்டால் இந்த சமூகத்திற்கு நல்லது. இதுதான் திராவிட இயக்கமும் பெரியாரும் விரும்பிய சமூகநீதி ஆகும்" என தனது ட்வீட்டில் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், சனிக்கிழமையன்று இந்த விவகாரம் பெரிதானது. அ.தி.மு.கவின் வழக்கறிஞர் அணியின் இணைச் செயலாளர் சி. திருமாறன் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பிய புகாரில் ஆ. ராசா தொடர்ந்து இவ்வாறு பேசுவதால், அவர் பிரச்சாரம் செய்யத் தடைவிதிக்க வேண்டுமெனக் கோரினார்.

இதற்குப் பிறகு ஊடகம் ஒன்றிடம் பேசிய ஆ. ராசா, தனது பேச்சு வெட்டி, ஒட்டப்பட்டு பரப்பப்பட்டு, தவறாகப் புரிந்துகொள்ளபப்பட்டிருப்பதாகக் கூறினார். இருந்த போதும் சமூக வலைதளங்களில் இது தொடர்பான சர்ச்சை தொடர்ந்துகொண்டே இருந்தது.

**பேச்சில் கண்ணியம் வேண்டும்: மு.க.ஸ்டாலின்**

இந்த நிலையில்தான் தி.மு.க. தலைமையும் இதுபோன்ற பேச்சுகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்ட தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், "மக்களிடையே பரப்புரை செய்யும்போது நமது கழக மரபையும் மாண்பையும் மனதில் வைத்துச் செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறேன். வெற்றிக்கு முன், வெற்றிக்கான பாதையும் முக்கியமானது என்பதை அனை வரும் நினைவில் கொள்ள வேண்டும். பரப்புரையில் ஈடுபடும் போது கழகத்தினர் உணர்ச்சிவசப்பட்டு, கண்ணியக் குறைவான சொற்களை வெளிப்படுத்திடக் கூடாது. அத்தகைய பேச்சுகளை கழகத் தலைமை ஒருபோதும் ஏற்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி.மு.க. கூட்டணியின் வெற்றி உறுதியாகவும் வலிமையாகவும் மக்களால் தீர்மானிக்கப்பட்டுவிட்ட நிலையில், கழகத்தினரின் பேச்சுகளைத் திரித்து, வெட்டி - ஒட்டி, தவறான பொருள்படும்படி செய்து வெற்றியைத் தடுக்க நினைத்து மூக்குடைபட்டவர்கள், இப்போதும் தோல்வி பயத்தால் மீண்டும் அதே பாணியை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களது எண்ணம் ஈடேறாத வகையில், கவனத் துடன் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்" எனக் கூறியிருக்கிறார்.

- நன்றி: பிபிசி தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**28-B**

**2019 - 04**

கார் ஒன்றினை உரு A இலும் உரு B இலும் சிறிய வித்தியாசங்களுடன் வரையப்பட்டுள்ளது. இங்கு 4 வத்தியாசங்களைக் காணமுடியும்.

1) கார் செலுத்தி கீறப்படவில்லை.



2)கார் கதவு கைப்பிடி கீறப்படவில்லை.



3) கார் பிற்புற சில்லில் வளையம் நீக்கப்பட்டுள்ளது.



3)கார் பிற்புற சில்லில் வளையம் நீக்கபபட்டுள்ளது.




விடை - 02

**2020 - 02**

தோலைக்காட்சி பெட்டி ஒன்றினை உரு A இலும் உரு B இலும் சிறிய வித்தியாசங்களுடன் வரையப்பட்டுள்ளது.இங்கு 5 வித்தியாசங்களைக் காண-முடியும்.


1) உரு A இலும் உரு B சிறிது பெரியதாகும்




2) உரு A இல் உணர்கொம்பில் குமிழ் உள்ளது. B இல் இல்லை.



3) உரு A இல்கறுப்பு திருகு உள்ளது.. B .ல் வெள்ளை திருகு உள்ளது.



4) உரு A இல்கறுப்பு கட்டை உயரமாக உள்ளது.. B இல் கறுப்பு கட்டை குறுகலாக உள்ளது.



விடை - 03

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# ஐ.நா. பிரேரணையை நிறைவேற்ற அழுத்தம் பிரயோகிக்க முடியாது!

*நான்கு முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு ஆதரவு பாரிய வெற்றி - சரத் வீரசேகர*

**கொழும்பு, மார்ச் 29**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையிலுள்ள விடயங்களை செயல்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. பரிந்துரைகளை செயல் படுத்துமாறு எவராலும் அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கவும் முடியாது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்:

ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணை குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் மாத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால், அவை தொடர்பில் இது வரையில் எவ்வித சாட்சியங்களும் எத்தரப்பினராலும் முன்வைக்கப்படவில்லை.

இறுதிக்கட்ட யுத்தம்தொடர்பில் நடுநிலையான தன்மையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவை கவனத்தில் கொள்ளாமை பேரவையின் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமையால் நாட்டு மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இதனால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையின் விடயங்களை செயல்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது.

தேசியபாதுகாப்பைகருத்தில்கொண்டே புர்கா, நிஹாப் ஆகியவற்றை தடை செய்யும் யோசனை முன்வைக்கப்பட்டது.

இவ்விவகாரம் காரணமாகவே பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இருப்பினும் பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட நான்கு முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தமை பாரிய வெற்றியாகும்- என்றார். (எ)

# வழக்குகள் தொடர்ந்து பிற்போடப்படுவதால் நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கையிழக்க நேரிடும்!

*நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு*



கொழும்பு, மார்ச் 29

உலக நாடுகளில் இணையவழி நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும், இலங்கையில் இன்னமும் அடிக்கடி வழக்குகள் பிற்போடப்படும் நிலையே தொடர்கின்றது. இது நாட்டின் நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கையிழப்பதற்கே வழிவகுக்கும் என்று நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

2021- 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கும் நிகழ்வும் முதலாவது கூட்டமும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பக்கச்சார்பும் அச்சமுமின்றி செயல்படும் அதேவேளை, அதன் சுயாதீனத்தன்மை தொடர்ந்து பேணப்படும் என்றும் நம்புகின்றேன்.

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் இறையாண்மை என்பன சட்டத்தரணிகள் சங்கத்தின் சுயாதீனத் தன்மையில் தங்கியுள்ளன.

அதுமாத்திரமன்றி சட்டத்தின் ஆட்சி, நீதி நிர்வாகம், சுயாதீன நீதித்துறை, மனித உரிமைகள் பாதுகாப்பு ஆகிய விடயங்களிலும் சட்டத்தரணிகள் சங்கத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியைத் தொடர்ந்து அமெரிக்காவில் இணையவழி நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது அவை மேலும் விரிவாக்கப்பட்டிருப்பதுடன் இரவுநேர நீதிமன்ற நடவடிக்கைளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் எமது நாட்டில் இன்னமும் அடிக்கடி வழக்குகள் பிற்போடப்படும் நிலையே தொடர்கின்றது. இது நாட்டின் நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கையிழப்பதற்கே வழிவகுக்கும்.

ஆகவே எமது நீதிமன்ற நடவடிக்கைகளின் செயல்திறனை மேம்படுத்த புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (எ)

# புத்தூரில் தனிமையில் வசித்த ஆண் ஒருவர் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 29

புத்தூரில் தனிமையில் வசித்து வந்த ஆண் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அவரது வீட்டுக்கு அருகில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

அதேஇடத்தைச் சேர்ந்த துரைராசா சந்திரகோபால் (வயது-52) என்பவரே கொலை செய்யப்பட்டார். இவருடனிருந்த பழைய பகையை வைத்து சிலர் இந்தக் கொலையைச் செய்துள்ளனர் என்று ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதிகளைப் பதவி விலக்கும்போது வெளிப்படைத்தன்மை மிகஅவசியம்

## சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் சாலிய பீரிஸ் வலியுறுத்து



**கொழும்பு, மார்ச் 29**

**அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் நீதிபதிகள் நியமனம் மற்றும் அவர்களைப் பதவி விலக்குதல் ஆகியவற்றின் போது உரிய சட்டதிட்டங்களும் வெளிப்படைத்தன்மையும் கடைப்பிடிக்கப்பட வேண்டியது மிகவும் அவசிய மாகும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.**

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கும் நிகழ்வும், முதலாவது கூட்டமும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றுக்கொண்டதன் பின்னர் சாலிய பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

சட்டத்தரணிகள் சங்கத்தின் சுயாதீனத்தன்மை நீதித்துறையின் சுயாதீனத்துவத்துக்கு இன்றியமையாததாகும். அதேபோன்று சட்டத்தரணிகள் சங்கத்தின் தீர்மானங்கள் அதன் கொள்கைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், கருத்துச்சுதந்திரம் உள்ளடங்கலாக மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் விதமாக செயல்பட வேண்டும். நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை உறுதிசெய்வதும், விரிவுபடுத்துவதும் சட்டத்தரணிகள் சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருப்பதுடன் அதனை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதி நிர்வாகக்கட்டமைப்பு ஆகியவற்றின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் போதும் அவை அச்சுறுத்தலுக்குள்ளாகும் போதும் நாம் அதனைப் பாதுகாப்பதற்காக முன்னின்று செயல்படுவோம்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் செயல்பாடுகள் தொடர்பிலும் சட்டத்தரணிகள் சங்கம் அவதானம் செலுத்தும். மேலும், அண்மைக்காலத்தில் சட்டத்தரணிகள் அவர்களது கடமையைச் செய்வதில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும்.

குறிப்பாக பொலிஸ் நிலையத்தில் அல்லது சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரைப் பார்வையிடுவதற்கு அவரது சட்டத்தரணிக்கு அனுமதி மறுப்பதென்பது சட்டத்தரணிகளின் உரிமையை மீறுவதாகும் என்றும் குறிப்பிட்டார். (எ)

# இலங்கை இழைத்த தவறுகளிலிருந்து பாடங்களை கற்றுக்கொண்டுள்ளோம்

## சீனாவுடனான உறவு குறித்து பங்களாதேஷ்

டாக்கா, மார்ச் 29

சீனாவுடனான தொடர்புகளைப் பேணும்போது இலங்கை இழைத்த தவறுகளிலிருந்து தமது நாடு பாடங்களைக் கற்றுக்கொண்டுள்ளதாக பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் வெளிவிவகார ஆலோசகர் கௌஹர் ரிஸ்வி தெரிவித்துள்ளார்.

அதுமாத்திமன்றி சீனாவுடனான தொடர்புகளின் போது மிகவும் சீரானதும் சரிவர அளவீடு செய்யப்பட்டதுமான முதலீட்டுக்கொள்கையையே தாம் பின்பற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா தனது கடன்பொறி மூலோபாயத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் அபிவிருத்தியடையாத நாடுகளைக் கவர்ந்திழுக்கும் வேளையில், இவ்வாறானதொரு கருத்து வெளியாகியிருப்பதாக சர்வதேச ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடான ஜிபோட்ரி போன்ற நாடுகள் சீனாவிடம் பெற்ற கடனை மீளச்செலுத்துவதற்கான ஆற்றலை இழந்துள்ளமையால் அவற்றின் சொத்துக்கள் மீதான கட்டுப்பாட்டை சீனாவுக்கு வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமையில் இருந்து தமது நாடு பாடம் கற்றுக்கொண்டுள்ளதாக ரிஸ்வி தெரிவித்துள்ளார். சீனாவிடம் ஜிபோட்ரி பெற்ற கடனின் பெறுமதி, அந்நாட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 70 சதவீதமானவற்றையும் விட அதிகமாகும் என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

மேலும், எமது நாட்டின் இறையாண்மையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை நாம் நன்கு அறிந்துள்ளோம்.

விடுதலையை இலக்காகக் கொண்ட போராட்டத்தின் ஊடாக நாம் தற்போது சுதந்திர நாடாக மாற்றமடைந்துள்ளோம்.

அதேவேளை, வெளிநாடுகளிடமிருந்து பெறும் கடன்களை மீளச்செலுத்தக்கூடிய எமது ஆற்றல் தொடர்பிலும் மிகுந்த அவதானத்துடன் இருக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# மாணிக்கக்கல் சுரங்கத்தில் சிக்கி இருவர் உயிரிழப்பு

அவிசாவளை, மார்ச் 29

அவிசாவளை பொலிஸ் பிரிவின் வெரலுபிட்டிய பிரதேசத்தில் மாணிக்கக்கல் சுரங்கத்தில் சிக்கி இரண்டு பேர் உயிரிழந்தனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிலவிய கடும் மழை காரணமாக சுரங்கத்தினுள் மின் தடை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து சுரங்கத்துக்கு சென்றிருந்த இருவர் அனர்த்தத்துக்கு முகங்கொடுத்திருந்தனர்.

சுரங்கத்தினுள் சிக்கி உயிரிழந்த இருவரின் சடலங்கள் தற்போதைய நிலையில் அவிசாவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. 44 மற்றும் 45 வயதுடைய இருவரே உயிரிழந்தனர். (எ)

# பௌத்தர்களின் ஆதரவை பெறவே தமிழ், முஸ்லிம்கள் மீது இனவாதம்

## பாரிய விளைவுகள் ஏற்படும் என்கிறார் காவிந்த



கொழும்பு, மார்ச் 29

ஜனநாயகக் கொள்கைக்கு முரணாகச் செயல்படும் நாட்டை சர்வதேசம் புறக்கணிக்கும் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இனியாவது விளங்கிக் கொள்ள வேண்டும்.

பௌத்த மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக அரசாங்கம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் இனவாதச் செயல்பாடுகள் தொடருமாயின் பாரிய விளைவுகள் ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன எச்சரித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் ஆட்சி முறைமையை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஒரு நாட்டை அங்கீகரிக்கும்.

அந்த வகையில் இலங்கை ஜனநாயக நாடு என்ற நிலைப்பாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகக் கொள்கைக்கு முரணாகச் செயல்படும் போது சர்வதேசம் கேள்வி எழுப்பும் இதற்குப் பதிலளிக்க வேண்டியது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இவ்விடயத்தில் இறையாண்மை என்பதைக் கூறி சர்வதேசத்தை வெறுக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை பல விடயங்களை உணர்த்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு காலத்திலிருந்து இலங்கை விவகாரம் மனித உரிமைகள் பேரவையில் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகின்றது .

இலங்கைக்கு எதிராக ஆரம்பத்திலிருந்து செயல்பட்ட நாடுகள் இம்முறையும் இலங்கைக்கு எதிராகவே செயல்பட்டுள்ளன.

ஆனால், கடந்த வருடம் இலங்கைக்கு ஆதரவாகச் செயல்பட்ட நாடுகள் இம்முறை இலங்கை விவகாரத்தில் அமைதி காத்துள்ளமை குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் குறித்து முன்வைக்கப்பட்ட பிரேரணையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

மாறாக கடந்த ஒன்றரை வருட காலப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயல்பாடுகள் குறித்து அதிகளவு அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டுக்கு பிறகு தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகம் மீது அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகள் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்களை பலவந்தமான முறையில் தகனம் செய்தல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை இலக்காகக் கொண்டு தொல்பொருள் அகழ்வாராய்ச்சி, தமிழ் சமூகத்தினர் மீது வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஆகியவற்றை பிரதானமாகக் குறிப்பிட வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்குடன் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தின்மீது தொடரும் அடக்குமுறைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். தனிச் சிங்கள மக்களின் ஆட்சியமைத்துள்ளோம் என்று பெருமிதம் கொள்ளும் அரசாங்கத்தை சிங்கள பௌத்த மக்களே புறக்கணிப்பார்கள்- என்றார். (எ)

# மேல் மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 29

மேல் மாகாணத்திலுள்ள அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளும் இன்று திங்கள்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி, தரம் ஒன்று முதல் சகல தரங்களுக்கும் இந்த ஆண்டுக்கான கற்றல் செயல்பாடுகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.


இதுதொடர்பான விஷேட சுற்றறிக்கை கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேராவால் வெளியிடப்பட்டுள்ளது.

மாகாண பிரதான செயலாளர்கள், மாகாண கல்வி செயலாளர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோருக்கு இந்த சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள பாடசாலைகளை தனிமைப்படுத்தல் காலம் நிறைவடையும் வரையில் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் குறித்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், மாணவர்களை பாடசாலை சூழலுக்குப் பழக்கப்படுத்துவதோடு, அவர்களது உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்ட பின்னர் மாணவர்களை பரீட்சைகள் அல்லது போட்டிகளுக்கு வழிநடத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடுத்த 100 ஆண்டுகளுக்கு பூமி பாதுகாப்பாக இருக்கும்

## உறுதிப்படுத்தியது நாஸா

நியூயோர்க், மார்ச் 29

அடுத்த நூறு ஆண்டுகளுக்கு பூமிக்கு அப்போபிஸ் சிறு கோளால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று நாஸா உறுதிப்படுத்தியுள்ளது.

2004ஆம் ஆண்டு அப்போபிஸ் என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது. இது பூமிக்கு மிகவும் ஆபத்தான சிறுகோள்களில் ஒன்றாக நாசா கருதியது. 2029, 2036 ஆம் ஆண்டுகளில் இந்தக் கோள் பூமிக்கு மிக நெருக்கமாக வரும் என்று கருதப்பட்டது. ஆனால் இது பின்னர் நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில் 2068 ஆம் ஆண்டு இந்தக் கோளால் பூமிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படும் என்று கருதப்பட்டது. ஆனால், இப்போது இந்த கோள் பற்றிய பகுப்பாய்வின் அடிப்படையில் இந்த அச்சுறுத்தலையும் நாஸா நிராகரித்துள்ளது.

“2068ஆம் ஆண்டு அப்போபிஸ் பூமியை தாக்கும் சாத்தியம் இல்லை. எமது கணக்கீடுகளின்படி, இந்த சிறு கோளால் அடுத்த 100 வருடங்களுக்கு எந்தவித மான அபாயமும் பூமிக்கு கிடையாது என்று நாஸாவின் பூமிக்கு அருகிலுள்ள பொருட்கள் பற்றி ஆராயும் விஞ்ஞானி டேவிட் பார்னோச்சியா அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அப்போபிஸ் என்பது இருளின் கடவுள் என்று பொருள்படும். பண்டைய எகிப்தியர்கள் இதனை வழிபட்டனர். 340 மீற்றர் நீளமான இந்த சிறுகோளால் பூமிக்கு அபாயம் ஏற்படும் என்று முன்னர் எச்சரிக்கப்பட்டது. இதுபோன்ற ஒரு சிறுகோளின் மோதலாலேயே பூமியில் டைனோசர்கள் அழிந்து போயின என்று ஆய்வுகளில் தெரிய வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒரேநாளில் 114 பேர் சுட்டுக்கொலை! மியன்மாரில் இராணுவம் வன்செயல்!!

யங்கூன், மார்ச் 29

மியன்மாரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டும் 114 போராட்டக்காரர்கள் ஒரேநாளில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மியன்மாரில் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதை எதிர்த்து அந்நாட்டு மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். போராட்டக்காரர்களை இராணுவம் வலிந்து அடக்கி வருகின்றது. போராட்டக்காரர்களை இராணுவம் சுட்டுக் கொலை செய்தும் வருகின்றது.

ஆனாலும், அந்நாட்டில் போராட்டங்கள் குறைவடையவில்லை. நேற்று முன்தினமும் நாடு முழுவதும் பரவலாக 40 இடங்களில் போராட்டங்கள் இடம்பெற்றன. இதன்போது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 114 பேர் கொல்லப்பட்டனர்.


அந்த நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மாண்டலேயில்



13 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் ஐவர் இளைஞர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இராணுவம் மக்களை பாதுகாக்கும் என்றும் ஜனநாயகத்திற்காக பாடுபடும் என்றும் ஜெனரல் மின் ஆங் ஹேலிங் கூறிய மறுநாளே இந்தக் கொடூர தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தின் இந்தத் தாக்குதலுக்கு ஐ.நா., மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் கடும் கண்டனங்களை தெரிவித்துள்ளன. (ஐ)



# இந்திய ஜனாதிபதி மருத்துவமனையில்

புதுடில்லி, மார்ச் 29

டில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள இந்திய குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த்துக்கு நாளை இதய சத்திர சிகிச்சை நடைபெற வுள்ளது.

திடீர் நெஞ்சுவலியால் அவர் இராணுவ மருத்துவமனையில் இரு நாட்களுக்கு முன்னர் சேர்க்கப்பட்டார். அவருக்கு வழக்கமான பரிசோதனைகள் நடத்தப்பட்டு மருத்துவர்கள் கண்காணிப்பில் வைக்கப்பட்டார்.

75 வயதாகும் ராம்நாத் கோவிந்தின் உடல்நிலை சீராக இருப்பதாகவும் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையிலேயே அவருக்கு இதய சத்திர சிகிச்சை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போலந்தில் நாய்களுக்கு ஓய்வூதியம் வழங்க திட்டம்



வார்ஷோ, மார்ச் 29

போலந்து நாட்டில் பொலிஸ், எல்லைகாவல் படை, தீயணைப்பு படை என்பவற்றில் பணியாற்றும் நாய்கள், குதிரைகள் ஓய்வு பெற்ற பின்னர் அவற்றுக்கு ஓய்வூதியம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விலங்குகள் சேவைக் காலம் முடிந்த பின்னர் உரிய பராமரிப்பு இன்றி துன்பப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டே அவற்றுக்கு ஓய்வூதியம் வழங்க அந்த நாட்டின் உள்துறை அமைச்சு பரிந்துரை செய்துள்ளது.

இந்தப் பரிந்துரை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் போது உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவளிப்பர் என்று உள்துறை அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாய்கள், குதிரைகளுக்கு அளிக்கப்படும் இந்த ஓய்வூதியம் அவற்றின் மருத்துவ செலவுகளுக்கு உதவியாக இருக்கும் - என்றும் அவர் கூறினார். (ஐ)



# இந்தோனேசிய தேவாலயத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதல்

## 10 பேர் படுகாயம்

ஜகார்த்தா, மார்ச் 29

இந்தோனேசியாவில் தேவாலயம் ஒன்றின் அருகே நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் 10 பேர் காயமடைந்தனர்.

குருத்தோலை ஞாயிறு தினமான நேற்று மகஸ்ஸார் என்ற நகரத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் உடல் பாகங்கள் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். ஆனால் அவை இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒன்று அல்லது இருவர் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று கருதப்படுகின்றது. இதேவேளை, இந்தத் தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கின்றனர் என்பது குறித்து எந்த விவரமும் வெளியாகவில்லை.

உலகின் மிகப்பெரும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இந்தோனேஷியாவில் கடந்த காலங்களிலும் தேவாலயங்களை குறி வைத்து பயங்கரவாதிகள் தாக்குதல்களை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 40 நாடுகளின் தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி அழைப்பு



வாஷிங்டன், மார்ச் 29

பருவநிலை மாறுபாடு பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பாக விவாதிக்க 40 நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்.

உலக நாடுகள் அனைத்துக்குமான மிகப் பெரிய பிரச்னைகளில் ஒன்று, பருவ நிலை மாறுபாடு. இந்தப் பிரச்னையை எதிர்கொள்ள, 2016ஆம் ஆண்டு பிரான்ஸின் பாரிஸ் நகரில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதில், 195 நாடுகள் கையெழுத்திட்டன. சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்காக, இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஐ.நா., பருவநிலை மாறுபாடு மாநாடு, எதிர்வரும் நவம்பரில் நடக்க உள்ளது. இந்நிலையில், அதற்கு முன்னோட்டமாக, 40 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஏப்ரல் 22 - 23ஆம் திகதிகளில் மெய்நிகர் வழியில் இந்த மாநாடு நடக்கவுள்ளது. ரஷ்யா, ஜப்பான், பிரிட்டிஷ், இந்தியா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்பர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உயரம் பாய்தலில் புதிய சாதனை!

கொழும்பு, மார்ச் 29

உயரம் பாய்தலில் தேசிய சம்பியனான உஷான் நிவங்க பெரேரா, அமெரிக்கா ரெக்ஸாஸ் உயர் கல்வி நிறுத்தினத்தின் விளையாட்டுப் போட்டியில் புதிய சாதனையை நேற்று படைத்தார்.

அவர், 2.28 மீற்றர் உயரம் பாய்ந்தார். இதன் மூலம், உயரம் பாய்தலில் இலங்கையின் சாதனையை அவர் புதுப்பித்தார். பழைய சாதனையின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டு மஞ்சுள குமார வீரசேகர என்பவர், 2.27 மீற்றர் பாய்ந்து சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

உஷான் நிவங்க பெரேரா, நீர்கொழும்பு மாரிஸ் டெல வித்தியாலயத்தின் பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் சாதனைக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (ஐ)



## மியாமி ஓப்பன் ரென்னிஸ்: குவிட்டோவா அடுத்த சுற்றில்!

மியாமி, மார்ச் 29

அமெரிக்காவின் பிரபல ரென்னிஸ் தொடரான மியாமி ஓப்பனில் குவிட்டோவா, சபலென்கா, அசரென்கா ஆகிய முன்னணி வீராங்கனைகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்காவின் பிரபல ரென்னிஸ் தொடரான மியாமி ஓப்பன் கடந்த 22ஆம் திகதி ஆரம்பமானது.

இதில் நேற்று நடந்த லீக் சுற்று ஆட்டங்களில் செக் குடியரசின் பெட்ரா குவிட்டோவா இங்கிலாந்தின் ஜொகன்னா கொன்ராவை எதிர் கொண்டார். இந்த ஆட்டத்தில் 6 -1, 6 -2 என்ற கணக்கில் குவிட்டோவா இலகு வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோன்று மற்றொரு போட்டியில் பெலாரஸின் விக்ரோறியா அசரென்கா பிரபல வீராங்கனையான ஜேர்மனியின் கெர்பரை எதிர்கொண்டார். பலத்த சவாலுக்கு மத்தியில் 7 - 5 என்ற கணக்கில் முதல் சுற்றை வென்ற அசரென்கா, இரண்டாவது சுற்றை 2 - 6 என்ற கணக்கில் இலகுவாக வீழ்த்தினார்.

மற்றொரு போட்டியில் பெலாரஸின் சபலென்கா ரஷ்யாவின் குமிதோவாவை எதிர்கொண்டார். சவாலான இந்தப் போட்டியில் 7 - 6, 6 - 4 என்ற செற்களில் சபலென்கா வெற்றி பெற்றார். (ஐ)

# கொன்வே அதிரடி ஆட்டம்! நியூஸிலாந்து பெரு வெற்றி!!

ஹமில்டன், மார்ச் 29

பங்களாதேஷுக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியை 66 ஓட்டங்களால் வெற்றி கொண்டது நியூஸிலாந்து அணி. இந்தப் போட்டியில் மிரட்டலாக ஆடிய கொன்வே 11 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களை விளாசி 92 ஓட்டங்களை குவித்தார்.

நியூஸிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணி கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகின்றது. ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் நியூஸிலாந்து வென்ற நிலையில், தற்போது 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடுகின்றன.



இதன் முதல் போட்டி நேற்று ஹமில்டனில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

குப்தில், அலன் இணை தொடக்கம் கொடுத்தது. அலன் ஓட்டம் எதையும் பெறாமலே நசும் அஹமட்டின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த டெவன் கொன்வே அதிரடியில் மிரட்டினார்.

குப்தில் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 35 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வில் யங் கொன்வேக்கு இணையாக அதிரடி காட்டினார்.

கொன்வே 37 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் அரைச்சதம் அடித்தார். இதேபோன்று யங் 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 30 பந்துகளில் 53 ஓட்டங்களை குவித்து ஹசனின் பந்தில் ஹூசைனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் நியூஸிலாந்து 3 விக்கெட்கள் இழப்புக்கு 210 ஓட்டங்களை குவித்தது.

கொன்வே 52 பந்துகளில் 92 ஓட்டங்களையும், பிலிப்ஸ் 10 பந்துகளில் ஒரு சிக்ஸர், 3பௌண்ட்ரிகளுடன் 24 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் நசும் அஹமட் 2 விக்கெட்களையும், ஹசன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தொடக்கம் கொடுத்த முஹமட் நயீம் 27 ஓட்டங்களை எடுத்தார். ஹூசைன் 45, சபியுதீன் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் மஹ்முதுல்லா 11 ஓட்டங்களையும் எடுத்தனர். ஏனைய வீரர்கள் எவருமே இரட்டைப் படை இலக்க ஓட்டத்தை தொடவில்லை. இதனால் 20 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் 8 விக்கெட்கள் இழப்புக்கு 144 ஓட்டங்களைப் பெற்றது.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் சோதி 4, பெர்குஷன் 2 விக்கெட்களை வீழ்த்தினர். சௌதி, பென்னெட் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக கொன்வே தெரிவானார். (ஐ)

## சச்சினைத் தொடர்ந்து பதானுக்கும் தொற்று!

புதுடில்லி, மார்ச் 29

இந்திய கிரிக்கெட்டின் முன்னாள் வீரர் யூசுப் பதானுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர் தனது ருவிட்டரில், எனக்கு லேசான அறிகுறியுடன் கூடிய கொரோனா தொற்று உறுதியானது. நான், வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மருந்துகளையும் எடுத்துக்கொண்டேன். என்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் தாங்களாகவே விரைவில் பரிசோதனை செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன் - என்று பதிவிட்டுள்ளார்.

இந்தியாவின் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் நேற்று முன்தினம் கொரோனா தொற்றாளியாக இனங்காணப்பட்டார். இதைத் தொடர்ந்து மற்றொரு வீரரும் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆர்ச்சருக்கு இன்று சத்திர சிகிச்சை!

லண்டன், மார்ச் 29

இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சருக்கு இன்று திங்கட்கிழமை வலது கையில் சத்திர சிகிச்சை இடம்பெற வுள்ளது.



இந்தியாவுக்கு எதிரான இருபது - 20 போட்டியில் விளையாடிய ஆர்ச்சர் வலது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக நாட்டுக்கு திரும்பியிருந்தார்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு கையில் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறினர். இதைத் தொடர்ந்து இன்று அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் காரணமாக ஐ.பி.எல். தொடரில் இருந்து ஆர்ச்சர் விலகியுள்ளார். (ஐ)



## தவான் - ரோஹித் புதிய மைல்கல்!

புனே, மார்ச் 29

ஒருநாள் கிரிக்கெட்டில் இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் ரோஹித் சர்மா - ஷிகர் தவான் இணை 5,000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை ஞாயிற்றுக்கிழமை எட்டினர்.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நேற்று பகல் - இரவு ஆட்டமாக நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய ரோஹித் சர்மா - ஷிகர் தவான் இணை 14 ஓவர்கள் வரை விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்களை இணைப்பாட்டமாகக் குவித்தது.

இதன்மூலம், ஒருநாள் கிரிக்கெட்டில் 5,000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை இந்த இணை எட்டியது. சச்சின் டெண்டுல்கர் மற்றும் சௌரவ் கங்குலிக்கு அடுத்தபடியாக ஒருநாள் கிரிக்கெட்டில் தொடக்க இணைப்பாட்டமாக 5,000 ஓட்டங்களை கடந்த இணை ரோஹித் - தவான் என்ற பெருமையும் பெற்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி இருப்பே எமது இலக்கு!

## அதன் பின் ஆலை உரிமையாளர்களால் ஆட முடியாது என்கிறார் மஹிந்தானந்த



கண்டி, மார்ச் 29

**20 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி இருப்பினை அடைந்த பின்னர் நாட்டின் நெல் ஆலை உரிமையாளர்களால் அரிசி விலையைத் தீர்மானிக்க முடியாது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியும், 5 இலட்சம் மெட்ரிக் தொன் நெல்லும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அப்படியிருக்கும் போது நமக்கு ஏன் நியாய விலைக்கு நுகர்வோருக்கு அரிசியைப் பெற்றுக்கொடுக்க முடியாது. எம்மிடம் தற்போது 50 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல் உள்ளது. 2 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி இருப்பே தற்போதைய எமது இலக்கு. நாம் 20 இலட்சம் இருப்பினை அடைந்த பின்னர் ஆலை உரிமையாளர்களுக்கு ஆட முடியாது. நாட்டின் அரிசி விலை எம்மால்தான் தீர்மானிக்கப்படும்- என்றார். (எ)

# எரிபொருள் விநியோகத்தில் எந்தவித பாதிப்பும் இல்லை

## அமைச்சர் கம்மன்பில் கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 29

சூயஸ் கால்வாயில் சரக்குக் கப்பல் ஒன்று சிக்குண்டிருப்பதால், கப்பல் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், இது இலங்கையில் எரிபொருள் விலையில் தாக்கம் செலுத்தாது என பெற்றோலியத்துறை அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில்: 14 நாள்களுக்குப் போதுமான எரிபொருள் நாட்டில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இந்த விபத்து காரணமாக உலகப் பொருளாதாரத்தில் பிரச்னை ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார். (எ)

# மேலும் 523 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, மார்ச் 29

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 523 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்திலேயே குறித்த இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஜப்பான் மற்றும் கட்டார் உள்ளிட்ட நாடுகளிலிருந்தே இவர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு வருகைதந்த அனைவரும், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக சுற்றுலா ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (எ)

# விபத்துக்களால் 24 மணிநேரத்தில் 11 பேர் மரணம்!

கொழும்பு, மார்ச் 29

வீதி விபத்துக்களால் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலத்துக்குள் 11 பேர் உயிரிழந்தனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவர்களுள் எட்டு பேர் நேற்று இடம்பெற்ற விபத்துக்களிலும், ஏனைய மூவரும் இதற்கு முன்னர் ஏற்பட்ட விபத்துக்களில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தனர்.

இந்தக் காலப்பகுதிகளில் இடம்பெரும் பெரும்பாலான வாகன விபத்துக்களுக்கு சாரதிகளின் கவனக்குறைபாடு, தூக்கம், வீதிகளில் காணப்படும் குழறுபடிகள் தொடர்பில் கவனம் செலுத்தாமை மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்துகின்றமையே காரணமாகும்.

சாரதிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பலர் சுற்றுலாப் பயணங்கள் செல்வதற்குத் தீர்மானித்திருக்கலாம்.

இவ்வாறு செல்லும் போது வாகனச் சாரதிகளுக்கு மதுபானங்களை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்வதுடன், அவர்களை எப்போதும் கவனமாக வாகனத்தைச் செலுத்துமாறு அறிவுறுத்தல்களை செய்ய வேண்டும்- என்றார். (எ)

# இ.தொ.காவின் மே தின பணம் கல்விக்காகச் செலவிடப்படும்!

## ஜீவன் தொண்டமான் உறுதி



ஹற்றன், மார்ச் 29

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடந்த காலங்களில் மே தின நிகழ்வுகளை மிகவும் பிரமாண்டமாக நடத்தியுள்ளது. இதற்காக இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை பெரும் எண்ணிக்கையானோர் தூர இடங்களிலிருந்து வருகை தருவார்கள். இதற்காக நாம் பாரியளவில் நிதியைச் செலவிட்டு வருகின்றோம். ஆகவே, இனிவரும் காலங்களில் மே தினத்துக்காக செலவிடும் பணத்தை தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விக்காகச் செலவிடத் திட்டமிட்டுள்ளோம் என தோட்ட வீடமைப்பு மற்று சமூக உட்கட்டமைப்புகள் வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தின நிகழ்வுகள் கொட்டகலையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்:

கடந்த காலங்களில் எத்தனையோ மே தினங்களை நான் பார்த்திருக்கின்றேன். அதற்காகப் பாரியளவில் நிதி செலவிடப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் இன்று எத்தனையோ தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வியைத் தொடர முடியாதுள்ளனர். பலர் பல்கலைக்கழகம் சென்று படிப்பதற்கு வாய்ப்பிருந்தும் அதனைச் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பது ஒரு குடும்பம், அந்தக் குடும்பத்தில் பொருளாதார கஷ்டங்கள் இருக்கும் போது நாம் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. ஆகவே, அவற்றிக்குத் தீர்வு காண வேண்டும். ஆகவே, கடந்த காலங்களைப் போல் அல்லாது உங்கள் பிரச்னைகளை தீர்ப்பதற்காக எனக்கு நீண்ட பயணம் ஒன்று செல்ல வேண்டியுள்ளது. அதற்காகத் தான் நீங்கள் எனக்கு அங்கீகாரம் கொடுத்துள்ளீர்கள். நிச்சயம் அதனை நான் செய்து முடிப்பேன்.

கடந்த காலங்களில் தோட்டத்தில் உள்ள தலைவிகளை காங்கிரஸ் மறந்த நிலையே காணப்பட்டது. இனிவரும் காலங்களில் அவ்வாறு நடைபெறாது. காங்கிரஸின் வளர்ச்சிக்கு மூத்த தலைவர் மற்றும் தலைவிகளின் பங்கு எப்போதும் அவசியம் அத்தோடு இனிவரும் காலங்களில் காங்கிரஸின் மாவட்ட காரியாலயங்களில் மூத்த தலைவர்களுக்கு காரியாலயத்தில் சென்று ஆலோசனைகளை வழங்குவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்கிறோம் என அவர் தெரிவித்தார். (எ)

# கொள்ளை சம்பவங்கள் அதிகரிக்கலாம்: வீட்டுப் பாதுகாப்பை உறுதிசெய்யுங்கள்!

## பொதுமக்களிடம் பொலிஸ் பேச்சாளர் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 29

சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியில் பல குற்றச் செயல்பாடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே, இவ்வாறன செயல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:

தமிழ் - சிங்கள புதுவருட கொண்டாட்டங்களின் போது, திட்டமிட்ட குழுவினர் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களால் பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இத்தகைய குற்றச்செயல்பாடுகள் தற்போதும் பதிவாகி வருகின்ற நிலையில் அவை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளது.

தங்கச் சங்கிலி, வாகனங்கள் கொள்ளை, தங்க நகை விற்பனை நிலையங்கள் மற்றும் நிதி நிலையங்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளது.

இதனால், பொது மக்கள் இது தொடர்பில்அதிக கவனம்செலுத்த வேண்டும். இதன்போது வீட்டை விட்டு வெளியில் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வீட்டின் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

சொந்த வாகனங்களில் செல்பவர்கள், வாகங்களை நிறுத்தி வைக்கும் போது அதன் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

வங்கிகள் உள்ளிட்ட நிதி நிலையங்களில் பணத்தை வைப்பிலிடச் செல்பவர்கள், தங்களைச் சுற்றியுள்ளவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், தங்களிடமுள்ள பணத்தை பாதுகாப்புடன் வங்கிக்கு கொண்டுசெல்ல வேண்டும்.

இதேவேளை, வர்த்தக நிலையங்கள் அருகில் காணப்படும் ஏனைய வர்த்தக நிலையங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதுடன், ஏதேனும் அனர்த்தம் நிகழ்ந்தால் உடனே அதனை ஏனைய வர்த்தக நிலையங்களும் அறிந்து கொள்வதற்காக திட்டமொன்றைத் தயாரித்திருத்தல் வேண்டும்.

இந்நிலையில் வர்த்தக நிலையங்கள், நிதி நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் இவ்வாறான நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டால் அதுதொடர்பில் தெரியப்படுத்துவதற்காக, அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களின் தொலைபேசி இலக்கம் மற்றும் அவசர அழைப்பு பிரிவின் இலக்கங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்- என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையைக் கண்காணிக்க ஜெனிவாவில் புதிய செயலகம்!

## 13 உறுப்பினர்கள் செயற்படுவார்கள் எனவும் தகவல்

ஜெனிவா, மார்ச் 29

**இலங்கையில் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்காக ஐ.நா.மனித உரிமை பேரவை ஜெனிவாவில் செயலகமொன்றை ஏற்படுத் தவுள்ளது.**

மனித உரிமை பேரவையின் செயலாளர் உறுப்புநாடுகளிற்கு வழங்கியுள்ள சுற்றுநிருபத்தில் 13 உறுப்பினர்களை கொண்ட செயலகம் குறித்தும் அதற்கு வருடாந்தம் தேவைப்படும் தொகை குறித்தும் தெரிவித்துள்ளார்.

இந்த செயலகம் விசாரணையாளர்கள் சட்டத்தரணிகளை கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. உருவாக்கப்படவுள்ள இந்த செயலகம் உலகளாவிய நியாயாதிக்கத்தை பயன்படுத்தும் நாடுகள் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களை சேகரிக்கும்.

இதன் காரணமாக இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட படைத்தரப்பினர் வெளிநாடுகளில் கைது செய்யப்படலாம். வெளிநாட்டு நீதிமன்றங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் யுத்தத்துடன் தொடர்புபட்ட அரசியல் தலைவர்களும் வெளிநாடுகளில் கைதுசெய்யப்படலாம் எனவும் இது தொடர்பில் வெளியிடப்பட்ட தகவல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்சங்க கட்டளை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும்



கொழும்பு, மார்ச் 29

தொழிற்சங்க இயக்கத்தை ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டமொன்று செயல்படுத்தப்பட வேண்டும் என தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தம்புள்ளை தொழிலாளர் அலுவலக கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் மொத்தத் தொழிலாளர்களில் 35 சதவீதமானவர்கள் பெண்கள் என்றும், இந்தத் தொழிற் சங்கங்கள் அரசியலுடன் இணையாமல் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். இல்லையென்றால் தீர்க்கமுடியாத பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (எ)

## உள்நாடு, வெளிநாட்டு தயாரிப்பு துப்பாக்கிகளுடன் மூவர் கைது

காலி, மார்ச் 29

காலி, பதியதலாவை மற்றும் மீகஹாவத்த ஆகிய பகுதிகளில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றதகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

பதியத்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் 39 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட குழல்-12 ரக துப்பாக்கியும், அதன் 10 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன.

காலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போம்பே பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது உள்நாட்டுத் துப்பாக்கியுடன் 63 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

மீகஹாவத்த - மாஹேன சியம்பலாபே பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது உள்நாட்டுத் துப்பாக்கியுடன் காலி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

**வேலையாள் தேவை**

போட்டோ கொப்பி & Phone Reload கடைக்கு பெண் காசாளர் தேவை. தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. **(சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் முன்)**

**077 875 7860**

## அதிபர், மாணவர்கள் உட்பட பத்து பேருக்கு கொரோனா

கொழும்பு,மார்ச் 29

அங்குணுகொலபெலஸ்ஸ, அங்குணுகொலவெள பிரதேசத்தில் பாடசாலையொன்றின் அதிபர், இரண்டு மாணவர்கள் உட்பட 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, குறித்த பாடசாலையை தற்காலிகமாக மூட அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது என பிரதேசத்துக்குப் பொறுப்பான சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

## ஜூனில் மாகாண தேர்தலை நடத்தும் முடிவில் மாற்றம்?

கொழும்பு, மார்ச் 29

எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது மாகாண சபை தேர்தல் தொடர்பான சட்ட விதிகளில் மாற்றம் செய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்று அமைக்கும்தீர்மானத்தை பாராளுமன்ற முதல்வரும் வெளிநாட்டு அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன முன்வைக்கவிருக்கிறார்.

அரச, எதிர்க்கட்சி தரப்புகளை உள்ளடக்கி அமைக்கப்படும் இந்தத் தெரிவு குழு மாகாண சபை, உள்ளூராட்சி சபை தேர்தல் சட்டங்கள் தொடர்பில் ஆராயும். இதற்காக பாராளுமன்ற தெரிவு குழுவுக்கு நீண்டகாலம் பிடிக்கும். அத்துடன் பொது பிரதிநிதித்துவங்களின் கருத்துக்களும் கேட்கப்படும். இதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாகாண சபை தேர்தல்களை ஜூனில் நடத்த அரசு நடவடிக்கை எடுத்தது. ஜூன் மூன்றாம் வாரத்துக்குள் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழுவுடன் ஜனாதிபதி கோட்டாபய பேச்சு நடத்தினார். கடந்த 3ஆம் திகதி கட்சியின் இளநிலை தலைவர்களை சந்தித்த ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகுமாறும் கூறியிருந்தார். இந்நிலையில், தேர்தல் சட்டங்களில் திருத்தங்கள் ஏற்படுத்தப்படுவது தேர்தலை பின்நோக்கி செல்ல வழிவகுக்கும் என்று கருதப்படுகின்றது. (ஐ)

## மத அடிப்படையில் செயற்படுகின்றனவா? கட்சிகளின் யாப்பை பரிசீலிக்க குழு!

கொழும்பு, மார்ச் 29

பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் யாப்பினை பரிசீலிப்பதற்காக குழுவொன்றை நியமிக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.இனம் மற்றும் மத அடிப்படையில் அரசியல் கட்சிகளை பதிவு செய்யாதிருப்பதற்கு ஆணைக்குழு எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் உத்தியோக பெயர்கள், அவ்வாறான இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்டவையா என்பதை ஆராய்வதற்காகவே குழு நியமிக்கப்படவுள்ளது.

கட்சிகளின் யாப்பின் அவ்வாறான சரத்துகள் காணப்படின், அவை அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணானதா, இல்லையா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமிக்கப்படவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

குறித்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கட்சிகளைத் தெளிவூட்டி, அவ்வாறான கட்சிகளின் பெயர்கள் மற்றும் கட்சிகளின் யாப்பில் திருத்தம் மேற்கொள்வதற்கு கால அவகாசம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளை பிரிட்டனிடம் வாங்க பேச்சு!

கொழும்பு, மார்ச் 29

அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளை பிரிட்டனின் ஸ்ரேட் பார்மசூற்றிகல் கோர்ப்ரேஷன் நிறுவனத்திடம் இருந்து வாங்குதற்கான பேச்சை அரசு தொடங்கியுள்ளது என்று சுகாதார அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் இருந்து ஆரம்பத்தில் கோரப்பட்ட 85 இலட்சம் அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளை அந்த நிறுவனத்தால் இப்போது வழங்க முடியுமா என்று அதிகாரிகள் சந்தேகிப்பதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, நாட்டில் இது வரை 894,053 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தியாவில் இருந்து கிடைத்த அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளின் பங்களிப்புடன் கடந்த 2021 ஜனவரி 29 முதல் தடுப்பூசி போடும் பணி ஆரம்பமானது. அன்றிலிருந்து நேற்று முன்தினம் வரை 894,053 பேருக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ



**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா-வாராந்த சினிமா தகவல்கள்
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நலந்தானா-யாழ் போதனா வைத்தியசாலை பிரதி பணிப்பாளர் யமுனாநந்தா



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org